எங்கள் நினைவுகளில்

www.tamilarangam.net

# தோழர் இந்திரஜித் குப்தா



தொகுப்பு: எம்.ஏ. பழனியப்பன்

பாவை பப்ளிகேஷன்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# எங்கள் நினைவுகளில்
# தோழர் இந்திரஜித் குப்தா

தொகுப்பு : **எம்.ஏ. பழனியப்பன்**

**பாவை பப்ளிகேஷன்ஸ்**

*142, ஜானி ஜான் கான் சாலை,*

*இராயப்பேட்டை, சென்னை - 600 014.*

*✆ : 8550664, 8532441, 8532973,*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ENGAL NINAIVUGALIL
THOZHAR INDRAJITH GUPTA**

**எங்கள் நினைவுகளில் தோழர் இந்திரஜித் குப்தா**

தொகுப்பு : எம்.ஏ. பழனியப்பன்

பாவை பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

© உரிமை : பதிப்பகத்தார்

முதல் பதிப்பு: மார்ச் 2001

விலை : ரூ. 25/–

ஒளி அச்சு : பாவை ஒளி அச்சு

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,
142, ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
✆ : 8550664, 8532441

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதிப்புரை

இந்திய வானில் பேருருவாகப் பவனி வந்து, இந்த நாட்டின் கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் இடம் பெற்ற சிறந்த தொழிற்சங்கத் தலைவரும் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒப்பற்ற மூத்த தலைவரும் நாடாளுமன்றத்தின் தந்தை என்று அழைக்கப்பட்டவருமான தோழர் இந்திரஜித் குப்தா 20-2-2001ம் தேதி மறைந்த செய்தியைக் கேட்டு நாடே அதிர்ச்சியடைந்தது. மக்கள் அவையில் அவருக்கு அஞ்சலி செலுத்திப் பேசிய எல்லாக் கட்சித் தலைவர்களும் அவரது மிகச் சிறந்த பண்புகளையும் நாட்டுக்கும் மக்களுக்கும் ஆற்றிய அவரது அரிய சேவைகளையும் பாராட்டிப் பேசினர். மக்கள் அவையில் அவர் ஆற்றிய உரைகளைத் தொடுத்து வெளியிட வேண்டுமென்றும் அவரது சிலை பாராளுமன்ற மண்டபத்தை அலங்கரிக்க வேண்டுமென்றும் அங்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

கல்கத்தாவில் நடந்த மறைந்த இந்தத் தலைவரின் இறுதி ஊர்வலத்தில் லட்சோப லட்சக்கணக்கான மக்கள் திரண்டு வந்து கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

தமிழகம் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு தீர்வு காண மக்களவையிலும் வெளியிலும் தோழர் இந்திரஜித் தீவிரமாகச் செயல்பட்டார். உதாரணத்திற்கு ஒரு விஷயத்தைக் குறிப்பிடலாம். சென்னைக்கு அருகில் உள்ள செந்தில் நகர் மக்களுக்கு மிகவும் தேவைப்பட்ட ரயில் நிலையம் அமைவதில் அவர் ஆற்றிய பங்கு போற்றத்தக்கது. அவர் சென்னை வந்தபோது ஏற்பாடு செய்த வரவேற்பில் அந்த வட்டார மக்களே திரண்டு வந்து தங்கள் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர் மறைந்த செய்தி அறிந்து தமிழகத்தில் எல்லா ஊர்களிலும் அஞ்சலி கூட்டங்கள் நடைபெற்றன.

''எங்கள் நினைவுகளில் இந்திரஜித்குப்தா'' என்ற இந்த நூலில் அறிஞர்கள் பலர் இந்தத் தலைவர் பற்றி எழுதிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவரது உன்னத வாழ்க்கையும் பாடுபடும் மக்களுக்கு அவர் ஆற்றிய சேவையும் குறிப்பாக இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டியாக அமையும்.

மறைந்த இந்த மாபெரும் தலைவருக்கு அஞ்சலி செலுத்தும் முறையில் பாவை பப்ளிகேஷன்ஸ் இந்த நூலை தமிழக மக்களுக்குச் சமர்ப்பிக்கிறது.

குறுகிய காலத்தில் இதில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளைத் தொகுத்து வழங்கிய தொகுப்பாசிரியர் திரு. எம்.ஏ. பழனியப்பனுக்கு எங்கள் உளமார்ந்த நன்றி.

பதிப்பகத்தார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை

உழைக்கும் மக்களின் நெஞ்சங்களில் கேந்திரமான இடம்பிடித்து, காலமெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கும் தோழர். இந்திரஜித் குப்தா பல்துறைகளில் தேர்ச்சி பெற்றவர்.

எளிமை, நேர்மை, கண்ணியம் ஆகிய பண்புகளின் இருப்பிடமாகத் திகழ்ந்த அவர், 2001-ம் வருடம் பிப்ரவரி மாதம் 20-ம் தேதியன்று அதிகாலை 3-40 மணிக்குக் காலமானார்.

அவரது மறைவுச் செய்தி கேட்டு நாடே அதிர்ச்சிக்கு ஆளானது.

குடியரசுத்தலைவர், குடியரசுத்துணைத்தலைவர், மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அனைத்து மாநில, மாவட்டங்களில் அவரது மறைவையொட்டி, இரங்கல் கூட்டங்கள் பிப்ரவரி 20 மற்றும் 21-ம் தேதிகளில் நடத்தப்பட்டன.

மறைந்த தலைவரின் பன்முகத் திறமைகள் குறித்து அனைத்து அரசியல் கட்சியினரும் இரங்கல் தெரிவித்து உரையாற்றினர்.

'இந்திய நாடாளுமன்றத்தின் தந்தை'' எனப் போற்றிப் புகழப்பட்ட அவரது வாழ்க்கையைப் பற்றி விளக்கும் அரிய கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களும் பிற அரசியல் கட்சியின் தலைவர்களும், பத்திரிகைகளும் எழுதிய அவரது பண்புகள் குறித்த கட்டுரைகள், சகோதரக் கட்சிகள்; தூதரகங்களின் இரங்கல் செய்திகள் இத் தொகுப்பில் அடங்கியுள்ளன.

இத்தொகுப்பு நூல் மிக மிகக் குறுகிய காலத் தயாரிப்பாகும்.

சென்னை
10.3.2001

அன்புடன்,
எம்.ஏ. பழனியப்பன்
தொகுப்பாசிரியர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்திரஜித் குப்தா மறைவுக்கு அஞ்சலி

இந்தியக் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் அமரர் இந்திரஜித் குப்தாவுக்குக் கீழ்வரும் புகழஞ்சலியைத் தெரிவித்துள்ளார்:

'கோல்கத்தாவில் இந்திரஜித் குப்தாவின் சோக மரணம் அறிந்து நான் ஆழ்ந்த துயரமடைந்தேன்.

ஓர் உன்னதமான மூத்த நாடாளுமன்றவாதியும் மக்களின் மெய்யான தலைவருமாகிய குப்தா நமது நாட்டில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னணியில் இருந்து வந்துள்ளார்; மக்களின், குறிப்பாக, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் சுதந்திரங்களுக்காகவும், தன் வாழ்நாளின் இறுதிவரையிலும் போராடி வந்துள்ளார். பொதுநலன்களுக்காக உணர்ச்சியுடன் வாதாடி தனது தெளிவான பேச்சாற்றலாலும் ஆழ்ந்த நகைச்சுவையினாலும் நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளையும் விவாதங்களையும் வளமை செய்துள்ளார். தனது நீண்டகால மற்றும் சம்பவங்கள் நிறைந்த பொதுவாழ்க்கையில் வியக்கவைக்கும் எளிமையையும், விட்டுக்கொடுக்காத நேர்மையையும் நாணயத்தையும் கொண்டிருந்தார். அவருடன் பரிச்சயமான அனைத்து மக்களின் - அரசியல் கட்சிகள் மற்றும் சித்தாந்தங்களுக்கு அப்பாற்பட்டு - அன்பையும் மதிப்பையும் பெற்றிருந்தார். யூனியன் உள்துறை அமைச்சர் என்ற வகையில் ஒரு திறமையான நிர்வாகி என்றும் தனது முத்திரையைப் பதித்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியிலும் பல ஆண்டுகளாக அவரை அறிந்திருந்த பேறுபெற்றிருந்தேன். அவருடைய காந்தீய எளிமை, ஜனநாயகக் கண்ணோட்டம், மதிப்புகளின்பால் ஆழ்ந்த கட்டுப்பாடு ஆகியவை என்னை வியப்படையச் செய்துள்ளன. அர்ப்பணிப்புடனும், எடுத்துக்காட்டான முறையிலும் நாட்டுக்குச் சேவை செய்த இந்த ஒப்பற்ற பிரமுகருக்கு, நாட்டின் அனைத்துக் குடிமக்களுடனும் சேர்ந்து அஞ்சலி செலுத்துகிறேன். அவருடைய குடும்பத்தினர் அனைவருக்கும் அவருடைய எண்ணற்ற ஆதரவாளர்களுக்கும் அவரைப் பின்பற்றுவோருக்கும் என்னுடைய இதயங் கனிந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- கே.ஆர். நாராயணன்,
குடியரசுத் தலைவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்தியக் குடியரசு துணைத் தலைவர்

அமரர் இந்திரஜித் குப்தாவுக்கு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் கிருஷ்ணகாந்த் அளித்துள்ள புகழஞ்சலி.

'நாடாளுமன்ற உறுப்பினரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு மூத்த தலைவருமாகிய இந்திரஜித் குப்தா திடீரென காலமானது அறிந்து நான் ஆழ்ந்த அதிர்ச்சியடைந்தேன், பெரிதும் துயரமடைந்தேன்.

ஒரு மதிப்புமிக்க பொதுவாழ்வுப் பிரமுகரும், அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய சமூக ஊழியரும் அனைவரையும் கவர்ந்திழுக்கும் தலைவருமாகிய இந்திரஜித் குப்தா, நலிந்த மக்களின் நலன்களுக்காக உறுதியாகப் பாடுபட்டுவந்தார். தன்னுடைய வெளிப்படையான பண்புகளினால் புகழ்பெற்றிருந்த அவர் பன்முக நாடாளுமன்ற வாதியாகவும், ஒருசக்திவாய்ந்த பேச்சாற்றல் பெற்றவரும், ஒரு மதிநுட்பமான நிர்வாகியாகவும், ஒப்பற்ற வெகுஜனத் தலைவராகவும் திகழ்ந்தார். தனது நீண்டகாலப் பொது வாழ்வில், சமுதாயத்திலும் அரசியலிலும் ஒரு தனிச்சிறப்பான முத்திரை பதித்தவர், உள்ளார்ந்த எளிமையுடனும், கட்டுப்பாடுடனும் நேர்மையுடனும் திகழ்ந்தார். இதனால் கோடிக்கணக்கான மக்களின் அன்பையும் பாராட்டையும் பெற்றார். அவருடைய மறைவு ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. அதை நிரப்புவது கடினம்.

அவரது ஆதரவாளர்கள், தோழர்கள், மற்றும் அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும் என்னுடைய மனப்பூர்வமான, நெஞ்சார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சோகத்தைத் தாங்கி நிற்கும் சக்தியை அவர்கள் பெற பிரார்த்திக்கிறேன்.

- கிருஷ்ணகாந்த்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# லட்சிய கம்யூனிஸ்ட்

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய கவுன்சில்**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தோழர். இந்திரஜித் குப்தாவின் மறைவை ஆழ்ந்த துக்கத்துடனும் துயரத்துடனும் கட்சியின் தேசிய கவுன்சில் அறிவிக்கிறது. 2001 பிப்ரவரி 20 விடியற்காலையில், கல்கத்தாவில் உள்ள தனது இல்லத்தில் அவரது இறுதிமூச்சு நின்று போனது.

தோழர். இந்திரஜித்குப்தா சில காலமாக உடல் நலமில்லாமல் இருந்தார். அவருக்குப் புற்றுநோய் இருப்பது கடந்த நவம்பரில் கண்டறியப்பட்டது. அது அவரது உயிருக்கே உலை வைத்து விட்டது.

கடந்த அக்டோபரிலிருந்து அவர், டில்லியில் அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக்கழக மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றுவந்தார். இந்த ஆண்டு ஜனவரியில் அவர் கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டார்.

1919 மார்ச் - 18ல் இந்திரஜித் குப்தா பிறந்தார். 1937ல் டில்லிப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றபின், மேற்படிப்புக்காக இங்கிலாந்துக்குச் சென்றார்.

கேம்பிரிட்ஜில், பாசிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்த மாணவர்களுடன் இந்திரஜித் குப்தாவுக்குத் தொடர்பு ஏற்பட்டது. விரைவில் அவர் ஓர் அரசியல் வீரராகத் தேர்ச்சிபெற்றார்.

இந்திய மஜ்லிஸ் அமைப்பு, ஐரோப்பாவில் இருந்த இந்திய மாணவர் சங்கங்களின் சம்மேளனம் ஆகிய

www.tamilarangam.net



வற்றின் நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கு கொண்டார். வி.கே.கிருஷ்ணமேனன் துவக்கியிருந்த இந்தியா லீக்கின் துணை அமைப்புகளாக இவை செயல்பட்டு வந்தன. இந்தக் காலகட்டத்தில் பல மாணவ செயல்வீரர்களுடன் அவருக்கு நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது.

இந்தியாவுக்குத் திரும்பியவுடன் ஒரு கம்யூனிஸ்ட் செயல்வீரராகப் பணியாற்றுவதற்காக, அவர் மார்க்சியம் லெனினியத்தைப் பயின்றார்.

1940 ம் ஆண்டு கேம்பிர்ஜில் பொருளியலில் பட்டம் பெற்றார். 1940 அக்டோபரில் தோழர் இந்திரஜித் குப்தா விடுதலைப் போராட்டத்தில் முழுமூச்சாக ஈடுபட்டார். தலைமறைவாகச் செயல்பட்டு வந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியரானார். கட்சியில் 'கூரியராக' சிறப்பான முறையில் பணியாற்றினார்.

1942-ல், கட்சியின் மீதிருந்த தடை நீக்கப்படுவதற்கு சற்றுமுன்பாக, அவர் வங்காளத்துக்கு மாற்றப்பட்டார். அங்கு தொழிற்சங்க வேலைகளில் ஈடுபடும்படி பணிக்கப் பட்டார். இவ்வாறுதான், வாழ்நாள் முழுதும் நீடித்த அவரது தொழிற்சங்கப்பணி தொடங்கியது.

வங்காளத்தில் சணல்ஆலைத் தொழிலாளர்களிடை யில், அவரது தொழிற்சங்கப்பணி ஆரம்பமாகியது. அவர் தனது செயல்பாட்டுத் துறையை விரிவுபடுத்தி, துறை முகத் தொழிலாளர்கள், ரயில்வே தொழிலாளர்கள் ஆகியோரை அமைப்புரீதியாகத் திரட்டுவதில் ஒரு முக்கிய பங்காற்றினார்.

அகில இந்திய துறைமுக மற்றும் டாக் தொழிலாளர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளராகவும், பின்னர் தலைவராகவும் நீண்டகாலம் பணியாற்றினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமறைவு ஊழியராகப் பல ஆண்டுகள் செயலாற்றினார். 1948-49ல், அவரது அரசியல் நடவடிக்கைகளுக்காக கைது செய்யப் பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அகிலஇந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (ஏஐடியுசி) பொதுச்செயலாளராகப் பலதடவை தேர்ந்தெடுக்கப் பட்டார். 1980ல் முதல் முதலாக, ஏஐடியுசி- யின் பொதுச் செயுலாளராக ஆனார். உலக தொழிற்சங்க சம்மேளனத் தின் செயல்பாடுகளில் ஊக்கமாக ஈடுபட்டார்.

1998 ல் உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2000-ல் இந்த அமைப்பின் உலக மாநாடு டில்லியில் நடைபெற்றபோது, அதன் கௌரவத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தோழர். இந்திரஜித் குப்தா, 1971-ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர்களின் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1988ல் கட்சியின் துணைப்பொதுச் செயலாளர் ஆனார்.

ஹைதராபாத்தில் நடைபெற்ற கட்சிக் காங்கிர சுக்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னால், 1992ல் கட்சியின் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், 1996 (மத்தி)வரையில் (பாதி ஆண்டுவரை அப்பதவி யில் நீடித்திருந்தார்.

1996 - தேர்தலில் இடதுசாரி - மாநிலக்கட்சிகள் அதிகஎண்ணிக்கையில் வெற்றி பெற்றதால் காங்கிரஸ் ஆட்சி யில் இணையாமல் வெளியில் இருந்து ஆதரிப்பது என்ற அடிப்படையில் எச்.டி. தேவகௌடா தலைமையிலான

www.tamilarangam.net



ஐக்கிய முன்னணியின் மத்திய அமைச்சரவையில் உள்துறை அமைச்சராகப் பணியாற்றினார்.

அமைச்சர் பொறுப்பேற்ற பின்னர் கட்சியில் பொதுச் செயலாளர் பதவியை 1996 - மத்தியில் கைவிட்டார். இருப் பினும் தேசிய கவுன்சிலின் செயலாளர்களில் ஒருவராக நீடித்தார்.

தோழர்.இந்திரஜித் குப்தா, நாட்டின் மிகவும் மூத்த நாடாளுமன்ற உறுப்பினராவார். இரண்டாவது மக்களவைக்கு 1960ல் முதன் முதலில் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆறாவது மக்களவை (1977-79) நீங்கலாக, அவர் அதையடுத்து நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் மக்களவைக்கு, மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1996ல் பதினோராவது மக்களவைக்கு, குடியரசுத் தலைவ ரால் இடைக்கால சபாநாயகராக நியமிக்கப்பட்டார். 12-வது மற்றும் 13-வது மக்களவைக்கும் அவர் தற்காலிக சபா நாயகராக நியமிக்கப் பட்டார்.

நாடாளுமன்றவாதி என்ற வகையில் தோழர், இந்திரஜித் குப்தா ஒரு சிறப்பிடத்தைப் பெற்றார். சிறந்த 'நாடாளுமன்றவாதி' என்ற வகையில் 1992-ல் அவருக்கு முதலாவது 'கோவிந்த் வல்லப பந்த்' விருது வழங்கப் பட்டது.

பொருளாதாரம், அயல்விவகாரத்துறை மற்றும் பாதுகாப்புத்துறை விவகாரங்களில் அவர் கூர்மையான அக்கறை கொண்டிருந்தார். இத்துறைகள் பற்றிய நாடாளு மன்றக் குழுவுக்குத் தலைவராகவும் இருந்தார்.

புருலியா என்ற இடத்தில் விமானத்திலிருந்து ஆயுதங்கள் வீசப்பட்ட சம்பவத்திற்குப் பின்னர் பாதுகாப்பு சம்பந்தமான நாடாளுமன்றக் குழுவின் தலைவர் பதவி யிலிருந்து விலகினார்.

www.tamilarangam.net



மத்திய உள்துறை அமைச்சராக இருந்தபோது பல முன் முயற்சிகள் எடுத்து, குறிப்பாக காவல்துறை சீர் திருத்தங்களை மேற்கொண்டார்.

வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளை அரசு மேற்கொள்வது சம்பந்தமான கமிட்டிக்கும் அவர் தலைவ ராக இருந்தார்.

அவருடைய மிகவும் மூத்த நாடாளுமன்ற அனுப வத்தினாலும், செயலூக்கமான நாடாளுமன்றப் பாத்திரத் திற்காகவும், அவர் 'இந்திய நாடாளுமன்றத்தின் தந்தை'' என்று அழைக்கப்பட்டார்.

தோழர், இந்திரஜித்குப்தா முறையாக நூல் எழுது பவராக இல்லாவிட்டாலும், 'சணல் தொழிலில் மூல தனமும் தொழிலாளர்களும்'' என்ற தலைப்பில் ஒரு மிகச் சிறந்த நூலை எழுதினார். அது இன்றும் அத்தொழில் பற்றி ஒரு குறிப்பு ஏடாகக் கருதப்பட்டு வருகிறது.

'தேசப்பாதுகாப்பில் சுயசார்பு'' என்ற மற்றுமொரு பெருமைக்குரிய நூலை எழுதினார்.

தோழர், இந்திரஜித் குப்தாவின் மறைவினால், நாடு ஒரு தலைசிறந்த நாடாளுமன்றவாதியை, உலகள வில் மதிக்கப்பெற்ற ஒரு தொழிற்சங்கத் தலைவரை, கம்யூனிஸ்ட் இயக்கம் ஒரு லட்சியக் கம்யூனிஸ்டையும் இழந்து விட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சில், அதனுடைய பெருமைக்குரிய தலைவரின் நினைவாக செங் கொடி தாழ்த்தி அஞ்சலி செலுத்துகிறது.

★★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திரும்பிப் பார்க்கிறேன்

இந்திரஜித் குப்தா

1937-ல் நான், டில்லிப் பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்றதற்குப் பின்னர், என்னுடைய பெற்றோர், மேல்படிப்புக்காக என்னை இங்கிலாந்துக்கு அனுப்பினர். அதுவரையிலும் எனக்கு அரசியலில் அக்கறை இருக்கவில்லை. மாணவர் இயக்கத்திலும்கூட நான் பங்கேற்கவில்லை. எங்களுடைய குடும்பத்தில் பலர் உயர்நிலை அரசாங்க அதிகாரிகளாக இருந்துள்ளனர்.

செயின்ட் ஸ்டீபன்ஸ் கல்லூரி ''ராயல்'' கல்லூரி என்று புகழ் பெற்றிருந்தது. அரச குடும்பத்தினர் படித்த கல்லூரி அது. குடும்பத்தின் அடியொற்றி நானும் செல்ல வேண்டும் என்ற கருத்து எழுதப்படாத நியதியாக இருந்தது. நானும் இது குறித்து எக்கேள்வியும் எழுப்பவில்லை.

பிரிட்டனில் பல்கலைக்கழக மாணவர்கள் அப்பொழுது அரசியல் ரீதியில் கொந்தளிப்பு அடைந்திருந்தனர். ஐரோப்பாவில் பாசிசம் எழுச்சி பெற்றிருந்தது. ஹிட்லருடைய ஆக்கிரமிப்புத் திட்டங்களுக்கு பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் டோரி தலைமையிலான அரசு உடந்தையாக இருந்தது. ஸ்பெயினில் உள்நாட்டுப் போர் நடைபெற்று வந்தது. இவையெல்லாம் மாணவரிடையே பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தன.

இந்த சம்பவங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் ஒருவருடைய ஆர்வத்தை இயல்பாகவே தூண்டிவிடும் வகையில் இருந்தன. இடதுசாரி மாணவர்கள் பலர், பல்கலைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கழகத்தை விட்டு வெளியேறி ஹிட்லருக்கும், முசோலினிக்கும் எதிராக, ஸ்பானியக் குடியரசைப் பாதுகாப்பதற்காக சர்வதேசப் படையில் சேர்ந்து கொண்டிருந்தனர். பாசிஸ்ட் எதிர்ப்பு உணர்வு உச்சநிலையை அடைந்திருந்தது.

கேம்பிரிட்ஜில் ஓர் இந்திய மாணவர் குழுவிற்கு, என்னுடைய ஒன்றுவிட்ட சகோதரி ரேணு சக்கரவர்த்தி என்னை அறிமுகம் செய்து வைத்தார். அந்தக் குழுவின் உறுப்பினர்கள், வருங்கால இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயல் வீரர்களாகத் தங்களை சித்தாந்த ரீதியில் பயிற்று வித்துக் கொள்வதற்காக, அடிப்படை மார்க்சிய - லெனினியப் பிரசுரங்களைப் பயின்று கொண்டும் அவை குறித்து விவாதித்துக் கொண்டுமிருந்தனர். இத்தகைய குழுக்கள் லண்டனிலும், ஆக்ஸ்போர்டிலும் கூடச் செயல்பட்டு வந்தன.

தமது உறுப்பினர்களை அடையாளம் காட்டிக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. ஏனெனில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அந்தச் சமயத்தில் தடை செய்யப் பட்டிருந்தது. மேலும் அவர்கள் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியிலும் உறுப்பினர்களாகவில்லை. அதனுடன் தொடர்பு மட்டுமே வைத்துக் கொண்டிருந்தனர்.

பிற்காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரபலத் தலைவர்களாக விளங்கிய பல தோழர்களை இந்தக் குழுக் களில் நான் கண்டேன். பூபேஷ் குப்தா, ஜோதிபாசு, நிகில் சக்கரவர்த்தி, ரேணு சக்கரவர்த்தி, மோகன் குமாரமங்கலம், பார்வதி குமாரமங்கலம், என்.கே. கிருஷ்ணன், அருண் போஸ், ரொமேஷ் சந்திரா இன்னும் பலர். ஆனால் அவர்கள் அனைவரும், இந்தியாவுக்குத் திரும்பிய பின்னர் கம்யூனிஸ்ட் கருத்துக்களைத் தொடர்ந்து பின்பற்றி வந்தனர் என்று கூற முடியாது. சரிபாதியானவர்கள் அக்கொள்கையைக் கடைப்பிடித்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எங்களுடைய மார்க்சீயப்' பயிற்சியைத் தவிர, இந்திய மாணவர்களின் வெகுஜன அமைப்புகளில் நாங்கள் செயல்பட்டுவந்தோம். இந்திய மஜிலிஸ், ஐரோப்பா விலுள்ள இந்திய மாணவர் சங்கங்களின் சம்மேளனம் ஆகியவை அந்த அமைப்புகளாகும்.

வி.கே. கிருஷ்ணமேனன் தொடங்கி நடத்தி வந்த 'இந்தியா லீக்' என்ற அமைப்பின் நடவடிக்கைகளிலும் நாங்கள் உதவி வந்தோம். இந்தியாவின் சுதந்திரத்திற்கு இயக்கம் நடத்தும் பிரதான மேடையாக அது விளங்கி வந்தது.

இங்கிலாந்துக்குச் செல்வதற்கு முன்னால், தேசிய இயக்கத்தைப் பற்றி எனக்குச் சிறிதும் அனுபவம் இல்லை. கம்யூனிஸ்ட் இலக்கியங்களைப் பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது.

கேம்பிரிட்ஜ் குழுவில் நான் சேர்ந்த பொழுது முற்றிலும் அறியாப் பிள்ளையாக இருந்தேன். ஆனால் என்னுடைய உற்சாகம் கரை கடந்து ஓடியது. நான் படிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டிருந்த சில ''கனமான'' மூல இலக்கியங்களைச் சிறிதும் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதை நான் ஒத்துக் கொண்டாக வேண்டும்.

பெர்னால் என்பவர் எழுதிய ''விஞ்ஞானத்தின் சமூகச் செயல்பாடு,'' ஸ்ட்ரேச்சி என்பவர் எழுதிய ''சோச லிசத் தத்துவமும் நடைமுறையும்'' போன்ற புத்தகங்களும் நேருவின் ''சுயசரிதையும்'' கூட ஆரம்பத்தில் என் மீது கூடுதல் செல்வாக்குச் செலுத்தின.

அந்தக் காலத்தில், ''சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி யின் வரலாற்றுச் சுருக்கம்'' என்ற நூல் ஒவ்வொரு

www.tamilarangam.net



கம்யூனிஸ்டும் ''கட்டாயம்'' படிக்க வேண்டிய நூலாக இருந்தது. நான் அதைப் பக்கம் பக்கமாகப் பல தடவை படித்து ஜீரணித்தேன்.

லெனினுடைய நூல் தொகுதிகளுக்கு அதே அளவு முக்கியத்துவமும் சிந்தனையும் நாம் கொடுத்திருக்க வேண்டும் என்று இப்பொழுது நான் கருதுகிறேன். ஆனால், அது அரை நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலத்திற்கு முன்னால், அப்பொழுது புரட்சி கூப்பிடு தூரத்திற்கு முன்னால் இருப்பதாக நாங்கள் கற்பனை செய்து வந்த காலம்.

1939-ல் என்னுடைய கருத்துக்கள் முற்றாக மாறி விட்டனவென்றும், அரசு வேலையை மேற்கொள்வது அல்லது சிவில் சர்வீஸ் (ஐ.சி.எஸ்.) தேர்வுக்கு உட்காருவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று என்னுடைய குடும்பத்தினருக்குத் தெரிவித்து விட்டேன். இது ஒரு சிறிய குடும்ப நெருக்கடியை ஏற்படுத்திவிட்டது. ஆனால் காலப் போக்கில் அது சரிசெய்யப்பட்டு விட்டது.

அந்தக் கட்டத்திலும் கூட, கேம்பிரிட்ஜிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிய ஓராண்டுக்குள், தலைமறைவாகப் பணியாற்றும் கட்சியின் ஒரு முழுநேர ஊழியரா வேன் என்று நான் சிந்தித்ததில்லை.

நான் என்னுடைய பல்கலைக்கழகப் பயிற்சிகளை முழுமையாகக் கைவிடவில்லை என்பது மெய்யே. எந்த கம்யூனிஸ்ட் மாணவனும் அவ்வாறு செய்யக் கூடாது. இந்தியாவில் படித்து வந்த பொழுது நான் நல்ல சாதனை யாளராக இருந்துள்ளேன். இங்கிலாந்திலுங்கூட அவ் வாறே. இங்கு நான் பொருளியலையும் வரலாற்றையும் கற்றேன். நான் நன்கு படித்து 1940ல் கேம்பிரிட்ஜில் பட்டம் பெற்றேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1939-ல் செப்டம்பரில் இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. அப்பொழுது இந்தியாவுக்கும் இங்கிலாந் துக்குமிடையில் தகவல் போக்குவரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட போது, நாங்கள் கூடிய விரைவில் தாயகம் திரும்ப வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டது. நான் ஏற் கனவே பட்டம் பெற்று விட்டதால், நான் நாடு திரும்ப முடிவு செய்து 1940. அக்டோபரில் தாயகம் திரும்பினேன். சூயஸ் கால்வாய் ஏற்கனவே போக்குவரத்துக்கு மூடப் பட்டு விட்டதால், நர்ங்கள் லிவர்பூலிலிருந்து ஐந்து வாரங் கள் கப்பல் பிரயாணம் செய்து பம்பாய் வந்தடைந்தோம்.

தென் ஆப்பிரிக்கத் தலைநகர் கேப்டவுனில் நாங்கள் சிறிது காலம் தடுத்து நிறுத்தப்பட்டோம். அங்கு ''வெள்ளை யர்களுக்கு மட்டும்'' என்று ரிசர்வ் செய்யப்பட்ட சினிமா கொட்டகைகளுக்குள் செல்வதற்கு இந்தியர்களாகிய எங்களுக்கு அனுமதி இல்லை. அது எங்களுக்கு இன ஒதுக்கலின் முதலாவது நேரடி அனுபவம் ஆகும். அது இப்பொழுது, நெல்சன் மண்டேலா தலைமையிலான புகழ்மிக்க விடுதலை இயக்கத்தினால் தகர்த்தெறியப்பட்டு விட்டது.

நாடு திரும்பிவிட்டேன். என்ன செய்வது என்ற யோசனையிலாழ்ந்தேன். தலைமறைவாகச் செயல்பட்டு வந்த கட்சித் தலைமையுடன் தொடர்பு கொண்டேன். எந்தப் பொருத்தமான பணியிலும் முழு நேரம் கட்சிப் பணிபுரிய என்னுடைய ஆர்வத்தைத் தெரிவித்தேன். ஆணைக்குப் பொறுத்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டேன். அடக்குமுறையினாலும், கைதுகளாலும் பல மாநிலங்களில் தலைமறைவு ஏற்பாடுகள் குலைந்து போயிருந்தன. இதனால் திட்டங்கள் தாமதப்புட்டன.

www.tamilarangam.net



இதற்கிடையில், ஆசிரியர் பணியிலோ, அல்லது இதழியல் துறையிலோ நான் அக்கறை கொண்டிருக்கும் எண்ணத்தைத் தெரியப்படுத்தினேன். இதன் நிமித்தம், கல்கத்தாவில், என் வீட்டுக்கும் லாகூருக்கும் இடையில் நான் போய்வந்து கொண்டிருந்தேன். லாகூரில் என்னுடைய மூத்த சகோதரி வசித்து வந்தாள்.

அதிர்ஷ்ட வசமாக போலீசாரிடம் என்னைப் பற்றிய தகவல்கள் ஏதும் இல்லாததால், நான் தங்கு தடையின்றி பல இடங்களுக்குச் செல்ல முடிந்தது. ஒருவேளை என்னுடைய கேம்பிரிட்ஜ் தொடர்புகள் அவர்களுக்குத் தெரியவில்லை போலும்? நான் எப்படியிருப்பேன் என்று கூட அவர்களுக்கு அடையாளம் தெரியாமல் இருந்திருக்கக் கூடும்! இது எனக்கு மிகவும் அனுகூலமாகப் போயிற்று. இறுதியாக 1941, ஜூனில், லக்னோவில் தலைமறைவாக இருந்து நான் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டேன்.

என்னுடைய பணி, மற்றொரு தோழருடன் ரகசிய இல்லத்தைப் பராமரிப்பதாகும். நாங்கள் ஒருவர் மற்றொருவரின் உண்மைப் பெயர்களை அறிந்திருக்கவில்லை. எப்பொழுதாவது, பம்பாயிலிருந்து அனுப்பப்பட்ட ஒரு பெட்டி நிறைய சட்ட விரோதமான பிரசுரங்களைப் பெற்று கட்சி ஆணையின்படி அவற்றின் விநியோகத்திற்கு ஏற்பாடு செய்வது.

என் விஷயத்தில் ஒரு 'தலைவர்' என்ற வகையில் பணியைத் தொடங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனெனில் எனக்கு அரசியல் அனுபவமோ, ஸ்தாபன அனுபவமோ இருந்திருக்கவில்லை. நான் ஒரு சாதாரண, எளிய ''கூரியர்'' (தகவல் எடுத்துச் செல்பவர்) மட்டுமே. ஆனால் அந்தப் பணியாற்றுவது என்னைப் புல்லரிக்கச் செய்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எங்களுடைய ''ரகசிய இல்லத்தில்'' ஒரு சமயம் நாங்கள் அமர்ந்திருந்தோம். சோவியத் யூனியன் மீது ஹிட்லர் பெருமளவான படையெடுப்பை நடத்திய செய்தியை அப்போது வானொலியில் கேட்டோம். ஆனால் சோவியத் மக்களும் அவர்களுடைய செஞ்சேனையும் வெற்றிவாகை சூடும் என்பது பற்றிய உறுதியில் நாங்கள் இருந்தோம்.

பின்னர் நான், பம்பாயிலிருந்த அகில இந்திய கட்சி மையத்திற்கு மாற்றப்பட்டேன். அங்கு பொதுச் செயலாளர் தோழர், பி.சி. ஜோஷியின் நேரடி உத்தரவுகளின்படி, பணியாற்ற அமர்த்தப்பட்டேன். பல்வேறு மாநிலங்களுக்கிடையில் தொடர்புகளைப் பராமரிப்பது, முக்கிய செய்திகளைத் தாங்கிச் செல்வது, பெட்டி நிறைய சட்ட விரோதமான பிரசுரங்களை டில்லி, லாகூர், கல்கத்தா, லக்னோ முதலிய நகரங்களில் விநியோகத்திற்கு ஏற்பாடு செய்வது - இதுவே எனது பணியாக இருந்தது.

இன்றைய ரயில் பயண நிலைமைகளில் அது சாத்தியமாயிருக்காது. ஆனால் அந்தக் காலத்தில் அது எளிதாக இருந்தது. போலீசாரால் கண்டுபிடிக்க முடியாதவாறு இதைச் செய்வது என்பதே பிரதான நிபந்தனையாகும்.

ஒரு சமயம் பவானி சென் அவர்களையும், சோமநாத் லாஹிரி அவர்களையும் பம்பாய்க்கு, ஒரு இரகசியக் கூட்டத்திற்கு அழைத்துச் செல்லும் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

மற்றொரு சமயம், கிரிப்ஸ் தூதுக்குழு விஜயத்தின் போது, பி.சி. ஜோஷியையே டில்லிக்கு அழைத்துச் சென்றேன்.

www.tamilarangam.net



இந்தப் பணியில் நான் மிகவும் திருப்தி அடைந்தேன். ஏனெனில் இத்தகைய பணிகளை நிறைவேற்றுவதற்கு என்மீது நம்பிக்கை வைக்கப்பட்டது என்பது தெளிவு.

தலைமைப் பதவிக்கு வரும் எண்ணம் எப்பொழுதுமே என்னிடம் இருந்ததில்லை.

1942-ல் கட்சியின் மீது இருந்த தடை நீக்கப்பட்ட பிறகு, (இதற்கு சில மாதங்களுக்கு முன்னதாக, நான் ஏற்கனவே வங்காள மையத்துக்கு மாற்றப்பட்டு விட்டேன்). என்னைத் தொழிற்சங்க அரங்கில் பணியாற்ற அமர்த்துவது என்று முடிவு செய்யப்பட்டிருந்தது. ஏனெனில், ஹிந்தி பேசும் தொழிலாளர்களிடம் நான் எளிதாகப் பேச முடியும் என்பது இதற்குக் காரணமாக இருந்திருக்கக் கூடும்.

இவ்வாறு என்னுடைய் தொழிற் சங்கப் பணி தொடங்கியது. அது தொடர்கின்றது.

புத்தகங்களைக் காட்டிலும் தொழிலாளர்களிடமிருந்துதான் நான் அதிகம் கற்றுக் கொண்டேன்.

1960ல் பல சூழ்நிலைகளினால், கட்சி என்னை ஒரு நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் வேட்பாளராக நிறுத்த முடிவு செய்தது. இவ்வாறுதான் என்னுடைய நாடாளுமன்றப் பணி தொடங்கியது.

★★★

www.tamilarangam.net

# செவ்வணக்கம்
# தோழர் இந்திரஜித்!

ஏ.பி. பரதன்
பொதுச்செயலாளர்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

இந்திரஜித் குப்தா இனி நம்மோடில்லை!

2001 பிப்ரவரி மாதம் 20-ம் தேதி அதிகாலையில் அவர் ஆவி பிரிந்ததிலிருந்து, பல்வேறு வட்டாரங்களில் இந்த வார்த்தைகள் ஒலித்து, எதிரொலித்தன.

துக்க அலை அனைத்துப் பிரிவினரிடையேயும் படர்ந்து பரவியது.

அவரது உடற்கூறுகளின் முக்கிய அங்கங்களை, கொடிய புற்றுநோய், ஏழு அல்லது எட்டு மாதங்களுக்கு மேலாகவே, தின்று தீர்த்து, படுக்கையில் கிடத்தி விட்டது. அவரது நெருங்கிய கூட்டாளிகளான நாங்கள் இந்த ரகசியத்தை அறிவோம்.

மிகப் பிரபலமான பல நிபுணர்கள் இந்த நோயை எதிர்த்து அல்லும் பகலும் போராடி ஓய்ந்தனர். மீட்சிக் கான பாதை இனி இல்லை என்பது எங்களுக்குத் தெட்டத் தெளிவாகிவிட்டது. அவர் தனது முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறார் என்பது துலாம்பரமாகிவிட்டது.

ஆனால், அந்த முடிவு நேர்ந்தபோது அது நம்மை யெல்லாம் பொறி கலங்கடித்த பலமான இடியாயிற்று!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாமெல்லாம் சிறிது நேரம் உணர்ச்சியின்றி மரத்துப் போனோம். மரணத்தின் முடிவு இவ்வாறு இருந்தது.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு அடித் தளமிட்டு, அதைக் கட்டி வளர்த்த முதல் தலைமுறை கம்யூனிஸ்ட் தலைவர்கள் - பி.சி. ஜோஷி, டாக்டர் ஜி. அதிகாரி, முசாபர் அகமது, எஸ்.ஏ. டாங்கே, பி.டி. ரணதிவே, பி. சுந்தரய்யா, சி. ராஜேஸ்வர ராவ், ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட், டாக்டர் இசட்.ஏ. அகமது ஆகி யோர் நெடுநாட்களுக்கு முன்பே மறைந்து விட்டார்கள்.

இந்த முதல் தலைமுறையில் கடைசியாக வந்து, முந்தியதுடன் இடையறாத இணைப்புடைய இரண்டா வது தலைமுறையின் எஞ்சிய வெகுசிலரில் முதல் வரிசை யில் இருந்தவர் இந்திரஜித் குப்தா. அவருடன் சேர்ந்த இரண்டாவது தலைமுறை, பொறுப்புகளை மூன்றாவது தலைமுறையின் வலிமை மிக்க கரங்களில் ஒப்படைக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.

இந்திய சமுதாயம் எல்லாவிதமான சுரண்டல் வடி வங்களுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக இடை விடாது போராடும். மனித நீதியையும், சமதர்மத்தையும் பரிபாலிக்கும் ஒரு புதிய சமுதாயமாக்க ஒரு புரட்சிகர தலை கீழ் மாற்றத்தைக் கொண்டுவரும். இவற்றை வடிவமைக் கும் சக்தி வாய்ந்த நீரோட்டமாக கம்யூனிஸ்ட் இயக்கம் திகழும்.

உயர்மட்ட நிர்வாக அதிகாரிகளைக் கொண்ட, மிக வசதியான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் இந்திரஜித் குப்தா! ஆனால் மார்க்சியத்தின் விடுதலை வேட்கைச் சிந்தனைகள் மகத்தான சக்தி படைத்தவை. தனது கல்வி யைப் பூர்த்தி செய்வதற்காக இங்கிலாந்துக்கு அனுப்பி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வைக்கப்பட்ட இடத்தில், ஒரு வலிமை வாய்ந்த காந்தத் தால் ஈர்க்கப்படுவதுபோல் அக்கருத்துக்களால் கவரப் பட்டார்.

அவரை ஈன்றெடுத்த தாய்நாடு சுதந்திரத்துக்கான போராட்டத்தின் இறுதிக் கட்டத்தின் நுழைவாயிலில் காலடி எடுத்து வைத்துக்கொண்டிருந்தது.

இந்தியாவின் மீதும், சாம்ராஜ்யத்தின் மீதும் தமது பிடிப்பைத் தளர விடாமல் இறுக்கிப் பிடிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனது கைவரிசையை முழுமையாகக் காட்டி வந்தது. உலகம் பொங்குமாக் கடலைப் போன்ற பிரசவ வேதனையில் சிக்கித் தவித்தது. பாசிசம் ஐரோப்பா வில் தனது கோர தாண்டவத்தைத் தொடங்கியிருந்தது. உலகத்தை ஒரு பாழும் போரில் மூழ்கடிக்க ஹிட்லர் களும் முசோலினிகளும் மும்முரமாயிருந்தனர்.

ஏகாதிபத்தியவாதிகள் தமக்குள் நயவஞ்சக சூழ்ச்சியில் இறங்கினர். ஒருவர் மற்றவர் கழுத்தை நெரிப்ப தில் நாட்டங் கொண்டிருந்தனர். அவர்களது பைத்தியக் காரத்தனமான பேராசைக்கு எதிராக, சோவியத் ஒன்றியம் மட்டுமே குன்றென நிமிர்ந்து நின்று, அவற்றின் ஆசைக் கனவுகளைக் கலைத்து வந்தது.

இளம் இந்திரஜித்தின் உணர்ச்சிப் பிழம்பான ஆன்ம உணர்வு ஒரு உண்மையைப் பற்றிக் கொண்டது. சமாதானமும் சுதந்திரமும் ஜனநாயகமும் சமதர்மமும் பூத்துக் குலுங்கும் ஒரு வீரஞ்செறிந்த உலகத்திற்குச் செல் லும் பாதையை ஒளிமயமாக்கக்கூடிய மகத்தான சக்தி மார்க்சியம் மட்டுமே என்ற ஞானம் அவர் உள்ளத்தில் சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உயர்கல்வி கற்பதற்காக இந்தியாவிலிருந்து இங்கிலாந்து சென்றிருந்த வேறு சிலருடன் தானும் கம்யூனிஸ்டுகளின் வரிசையில் இடம் பெற்றார்.

அவரும் அவரையொத்த ஏனையோரும் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் பாதையைப் பின்பற்றுவதென்ற உள்ள உறுதியோடு, தாயகம் திரும்பினார்.

இந்தியக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்த கப்பலிலிருந்து இறங்கியதும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியர்ராகத் தன்னைப் பதிவு செய்து கொண்டார். அதைத் தொடர்ந்து, தனது நீண்ட நெடிய 60 ஆண்டுகாலப் பணியில், இந்தப் பாதையிலிருந்து தடுமாறியதென்ற தருணமே தோன்றியதில்லை.

வளம் கொழிக்கும் வீட்டுச் சூழ்நிலையிலிருந்து பிரிந்து, ஒரு புரட்சிக்காரனின் நிச்சயமற்ற வாழ்க்கையை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. அது, அவரை தலைமறைவு வாழ்க்கைக்கும் சிறை வாழ்க்கைக்கும் இட்டுச் சென்றது.

தொழிலாளர் வாழ்ந்த சிறு குடில்களுக்கும் குடிசைகளுக்கும் கட்சி அவரை அனுப்பி வைத்தது. ஆம், அங்கெல்லாம் போய் தொழிற்சங்கம் கட்ட வேண்டும் என்பதற்காகத்தான்.

அவர் ஒரு திறமை மிக்க தொழிற்சங்க அமைப்பாளர், தலைவர் என்பது வெகுவிரைவிலேயே வெளிப்பட்டது. அவரது வெளிப்படையான அந்தரங்க சுத்தியும், சுற்றி வளைக்காமல் நேரடியாகப் பேசுவதும், நோக்கத்தில் நேர்மையும் தனிநபர் நாணயமும், சொல்வன்மையுடனான வார்த்தை ஜாலங்களோ, ஒன்றை நூறாக்கிப் பூதக்கண்ணாடி போட்டுக் காட்டுவதோ இல்லாமல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தன்னடக்கமும் நிதானமும் மிக்க வாசகங்களைப் பிரயோகிப்பதும், அவரைத் தொழிலாளி வர்க்கத்தோடு இரண்டறக் கலந்து பழகப் பயன்பட்டது. தொழிலாளர்களில் பின்தங்கிய பகுதியினர்கூட அவர் பேச்சில் ஒன்றிப் போவார்கள்.

இந்தக் குண இயல்புகளும், தொழிலாளி வர்க்கத்தோடு முற்றிலுமாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டதும் சேர்ந்து, இந்தியாவின் தொழிற்சங்க இயக்கத்தின் உச்சிக்கும், பிறகு அங்கிருந்து உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் பதவிக்கும் உயர்த்தின.

வெளிநாட்டுத் தொழிற்சங்கத் தலைவர்கள் அவரை ஒரு உண்மையான நண்பனாகவும், ஒரு ஆற்றல் மிக்க தலைவராகவும், உலக தொழிற்சங்க இயக்கத்தின் சகோதரத்துவத்திலும், ஐக்கியத்திலும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவராகவும் அங்கீகரித்தனர்.

அவரது 60 ஆண்டு கால கொந்தளிப்பான அரசியல் வாழ்வில், ஒரே ஒரு சமயத்தில் கூட அவர் கோட்பாடுகளின் பேரில் சமரசம் செய்து கொண்டதில்லை.

பெருந்தன்மை வாய்ந்த, கண்ணியத்துக்குரிய அணுகுமுறையை, பண்பாட்டுடன் பழகுவதை ஒரு தடவை கூட அவர் கைவிட்டதில்லை. அதுதான் நண்பர்களும், பகைவர்களும் கூட அவரை அன்புடன் நேசிக்கும் பாங்கைத் தோற்றுவித்தது.

கட்சியிலும் தொழிற்சங்கத்திலுமுள்ள அவரது இளம் சகாக்களான எங்களுக்கு, அவர் வெடுக்கென்றும், கரடுமுரடாகவும் பேசுவதும் சில சமயங்களில் பொறுமை இழப்பதும் சில நேரங்களில் சங்கடமாயிருக்கும். ஆனால் அவர் எப்போதுமே ஒரு கண்ணியவான்தான்! நல்ல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோழர்தான்! எவரிடத்தும் ஒரு தலைச்சார்பு உணர்வோ, தீய எண்ணமோ அவருக்கு இருந்ததில்லை. அதனால்தான் அடுத்த நிமிடமே அவருடன் சேர்ந்து செல்வது, செயல்படுவது சர்வ சாதாரணமாயிருக்கும்.

அவரோடு நான் பிணைக்கப்பட்டிருந்தது, தொழிற்சங்க நடவடிக்கையில்தான். தொழிற்சங்க, தொழிலாளர் இயக்கத்தில் நிலவும் பிளவு அவரது இதயத்தை எந்தளவுக்கு அவரது ஆன்மாவைப் புண்படுத்தியிருந்தது என்பதை நான் அறிவேன்.

ஏஐடியுசி-யின் பொதுச்செயலாளர் என்ற முறையில், கடைசியாக அவர் கலந்து கொண்ட மூன்று மாநாடுகளில் அவர் தாக்கல் செய்த அறிக்கையில் மத்திய தொழிற்சங்கங்களை இணைப்பது குறித்து வற்புறுத்தியிருந்தார். அதிலும் குறிப்பாக, செங்கொடியின் பேராலும் சோசலிசத்தின் மீதும் சத்தியம் செய்யும் சங்கங்களையாவது குறைந்தபட்சம் ஒன்றுபடுத்த அவர் அழுத்தம் கொடுத்தார். ஐக்கிய மேடைகள் தோன்றுவதிலும், ஐக்கிய நடவடிக்கைகள் ஏற்படுவதிலும் முன்னேற்றம் தென்பட்டாலும், சங்கங்களின் சங்கமம் ஏற்பட ாததால் அவருக்குப் பெரும் வருத்தம்தான்.

தொழிலாளர் இயக்கமும், தொழிற்சங்க இயக்கமும் எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு முன்னால், அவ்வப்போது ஏற்படும் இந்தக் கூட்டு நடவடிக்கைகள் மட்டுமே போதாது.

கட்சியின் பொதுச் செயலாளராக அவர் பொறுப்பேற்றுக் கொண்ட போது, கம்யூனிஸ்ட் ஐக்கியம் பற்றி மீண்டும் பேசினார். இன்னமும் அந்த இலக்கு தூரத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தான் உள்ளது. இடதுசாரி ஒற்றுமை என்று இப்போது அழைக்கிறோமே, அத்துடன்தான் இப்போதைக்குத் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியுள்ளது. இதுவும் அவருக்குப் பெரும் வருத்தமாக இருந்தது.

1960-ல் நடந்த ஒரு இடைத்தேர்தலில் பங்கெடுத்ததன் மூலம் அவர் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தார். நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த நெடிய 37 ஆண்டு காலத்தில் அவரை மிஞ்சியவர் யாருமில்லை என்ற வரலாற்றைப் படைத்தார்.

ஒரு கம்யூனிஸ்ட் என்ற முறையில் அவர் தன் அபிப்பிராயங்களைக் கூறுவார். கட்சியின் பேச்சாளராகத் தான் தனது கருத்துக்களை வெளியிடுவார். தனிக்காட்டு ராஜாவாக அவர் ஒரு போதும் செயல்பட்டதில்லை. ஒரு கட்டுப்பாடு மிக்க சிப்பாயாகவே நாடாளுமன்றத்தில் அவர் செயல்பட்டார்.

நாடாளுமன்ற விதிகளையோ, சட்ட விதிகளின் கட்டுக் கோப்பையோ, ஒப்பந்த மரபு வழக்கத்தையோ தகர்த்தெறிந்து, தனது அசைக்க முடியாத அபிப்ராயத்தை நிலைநாட்ட அவர் முன் வந்ததில்லை. அந்த நெறி முறைகளையெல்லாம் செயல்திறனுடன் உபயோகித்து, தான் சொல்லவந்த சங்கதியைச் சொல்ல முயற்சிப்பார். அதுதான் ''மிகச் சிறந்த நாடாளுமன்றவாதி'' என்ற விருதை அவருக்குச் சம்பாதித்துத் தந்தது. தனக்கு இந்த கௌரவம் கட்சியினால்தான் கிடைத்தது என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். அதனால்தான், அந்த விருதுக்காகத் தரப்பட்ட அத்தனை பணத்தையும் அப்படியே கட்சியின் நிதிக்கு அன்பளிப்பாக வழங்கி ஆனந்தப்பட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோழர், இந்திரஜித் குப்தா இனி நம்மிடம் இல்லை. இழப்பு சாமான்யமானதல்ல; மகத்தானது. அவர் தனக்குப் பின்னால் ஒரு வெற்றிடத்தை விட்டுச் சென்றிருப்பதாகப் பலர் சொல்கிறார்கள். ஆனால் வெற்றிடத்தை இயற்கை ஒதுக்கித் தள்ளிவிடுகிறது. எனவே நமது கூட்டு முயற்சியின் வாயிலாக, இந்த வெற்றிடத்தை நிறைவு செய்வோம்.

தமிழில் : ஏ.எம். கோபு.

*நன்றி - நியூஏஜ் - மார்ச் 4, 2001*

★★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறியன சிந்தியாத சிறந்த மனிதர்

ஆர். நல்லகண்ணு
மாநில செயலாளர்,
கம்யூனிஸ்ட் கட்சி - தமிழ் மாநிலக்குழு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இந்திரஜித் குப்தா அவர்களின் மறைவுச் செய்தி (20.2.2001) கேட்டுக் கண் கலங்கி விட்டேன். அவரது பிரிவு, இடது சாரி இயக்கங்களுக்குப் பேரிழப்பு.

இந்திரஜித் குப்தாவின் தந்தை சதீஷ் சந்திர குப்தாவும், சகோதரரும் ஐ.சி.எஸ். அதிகாரிகள். இந்திரஜித் குப்தாவும் ஐ.சி.எஸ். படித்து அதிகாரியாக வரவேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட்டனர். அதனால் அவரை மேல்படிப்புக்காக லண்டனுக்கு அனுப்பி வைத்தனர்.

ஐ.சி.எஸ். படிக்க லண்டனுக்குச் சென்ற இந்திரஜித், 1940ல் கம்யூனிஸ்டாக நாடு திரும்பினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலம் அது. தலைமறைவாக இருந்த தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றி வந்தார் இந்திரஜித். இதற்காக சிறைத்தண்டனையும் பெற்றார்.

துறைமுகத் தொழிலாளர்கள், ரயில்வே தொழிலாளர்கள், கல்கத்தா சணல் ஆலைத் தொழிலாளர்கள் ஆகியோர் மத்தியில் தொழிற்சங்கப் பணியாற்றினார். படிப்படியாக ஏ.ஐ.டி.யு.சி.யின் அகில இந்தியத் தலைவராகவும், கடந்த சில ஆண்டுகளாக உலகத் தொழிற்சங்க

www.tamilarangam.net



சம்மேளனத்தின் கௌரவத் தலைவராகவும் பொறுப்பு வகித்துக் கொண்டிருந்தார்.

இரண்டாவது நாடாளுமன்றத்திலிருந்து தொடர்ந்து பதினோரு முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டவர் குப்தா. ''சிறந்த நாடாளுமன்றவாதி'' என்ற விருதை முதன் முதலாகப் பெற்றவர்.

ஐக்கிய முன்னணி அரசில் உள்துறை அமைச்சராக இருந்தார். ஆனால் தனக்கென தனி பங்களா ஒதுக்கப் பட்டதை அவர் ஏற்க மறுத்து விட்டார். வழக்கமான எளிய வாழ்க்கை முறையையே அவர் தொடர்ந்தார்.

பலமுறை தமிழ்நாட்டுக்கு அவர் வந்திருக்கிறார். நானும் அவருடன் பயணம் செய்திருக்கிறேன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 70-வது ஆண்டு விழாவின் போது, தமிழ்மாநிலக்குழு அலுவலகத்தில் புதிய இணைப்புக்கட்டடத்தை அவர் திறந்து வைத்தார்.

அந்த நிகழ்ச்சியையொட்டி மன்னார்குடி நகரத்தில் அவர் பேசுவதற்காக ஒரு கூட்டமும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

திருவாரூர் மாவட்டத்தோழர்கள் திருத்துறைப் பூண்டியிலிருந்து மன்னார்குடி வரை வழிநெடுக ஊருக்கு ஊர் வரவேற்புக் கொடுத்தார்கள். இருமருங்கும் சாரிசாரி யாக நின்ற உழைக்கும் விவசாய மக்களைக் கண்டு மனம் நெகிழ்ந்து போனார் குப்தா.

ஆனால், இருபது, முப்பது கார்கள் தன்னைப் பின்தொடர்ந்து வந்தது அவருக்குப் பிடிக்கவில்லை. ஆதிச்ச புரம் என்ற கிராமத்தில் கொடி ஏற்றியதும், 'என் பின்னால் இத்தனை கார்கள் வந்தால் நான் திரும்பி விடுவேன்'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று ஆத்திரத்தோடு சொன்னார். உடனே கார்களை யெல்லாம் மன்னார்குடிக்குத் திருப்பியனுப்பி விட்டோம்.

புதுவையில் தலைவர் வ. சுப்பையா அவர்களுக்கு அரசு தரப்பில் சிலை திறப்புவிழா நடந்தது. அந்த விழா வுக்கு இந்திரஜித் குப்தாவும் வந்திருந்தார். புதுவையில் ஆளுயர மலர் மாலைகள் அவருக்கு அணிவிக்கப்பட்டன. மலர்க் கொத்துக்கள் வழங்கப்பட்டன. அடிக்கடி புகைப் படங்கள் எடுக்கப்பட்டன. இப்படிப் பணத்தை விரய மாக்கும் ஆடம்பரம் அவருக்குப் பிடிக்கவில்லை.

1998-ம் ஆண்டு செப்டம்பரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 17-வது அகில இந்திய மாநாடு சென்னை காமராசர் நினைவு அரங்கில் நடந்தது.

தலை சிறந்த ஓவியர்களால் வரையப்பட்ட ஓவியங் களின் கண்காட்சியைத் திறந்து வைக்கும்படி இந்திரஜித் குப்தாவைக் கேட்டுக் கொண்டோம். அவரும் வருவ தாக ஒப்புக் கொண்டார். ஆனால் குறிப்பிட்ட நேரத்தை விட 30 நிமிடங்கள் தாமதமாகத் தான் அவரால் வர முடிந்தது. அன்று அவர் உள்துறை அமைச்சர் ஆனாலும் தனது தாமதத்திற்கு ஓவியர்களிடம் வருத்தம் தெரிவித் தார்.

துறைமுகத் தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாக ஒருமுறை அவர் சென்னைக்கு வந்திருந்தார். எனக்கு அப் போது உடல்நிலை சரியில்லை. பேச முடியாத அளவுக்குத் தொண்டைக் கட்டு இருந்தது. தொலைபேசியில் கூடப் பேச முடியவில்லை.

எனது நிலைமை தெரிந்ததும் அவரே கட்சி அலு வலகம் தேடி வந்து என்னை நலம் விசாரித்தார். அவருடைய இந்தப் பண்பு என்னை மெய்சிலிர்க்க வைத்துவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கைக்கு, அமைதிப் பணி தொடர்பாக இந்திய ராணுவம் அனுப்பப்பட்டதில் தோழர் இந்திரஜித் குப்தா வுக்கு மாற்றுக் கருத்து இருந்தது. ''இந்தியாவின் ஜன நாயகப் பெருமைக்கு அது இழுக்கு'' படையைத் திரும்ப அழைக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டார்.

உத்திரப் பிரதேசத்தில் எதிர்க்கட்சி அமைச்சரவை இருந்தது. அங்கே சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் இருந்தா லும், சட்டப் பிரிவு 356-ஐப் பயன்படுத்தி அந்த ஆட்சி யைக் கலைக்க மறுத்துவிட்டார் குப்தா. இதன் மூலம் தான் ஒரு சிறந்த ஜனநாயக வாதி என்பதை அவர் நிரூ பித்துக் காட்டினார்.

அவர், எதையும் கண்டு ஆசைப்படாத பற்றற்ற நிலையிலேயே வாழ்ந்து வந்தார். எளிமையாக வாழ்ந்தார்.

அறுபதாண்டு காலம் அரசியல் பொதுவாழ்வில் பதவிகள் அவரைத் தேடி வந்ததே தவிர, பதவியை நாடி அவர் அலைந்ததில்லை.

அதிகாரத்தில் இருந்த போதும், அதிகாரப் பற்றற்ற அரசியல்வாதியாகவே அவர் வாழ்ந்து காட்டினார்.

கண்ணியமும் பெருந்தன்மையும் கொண்ட மாபெரும் தோழர் இந்திரஜித் குப்தாவின் மறைவு, எங்க ளுக்குப் பேரதிர்ச்சி என்றால், அது மிகையில்லை.

★★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமத்துவத்தின் இலக்கணம்

ஏ.எம். கோபு.
ஆசிரியர், ஜனசக்தி

அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசில் (ஏ.ஐ.டி.யு.சி.) இணைக்கப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கங்களின் அனைத்திந்திய மாநாடு, சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் கல்கத்தாவில் நடைபெற்றது.

மேற்கு வங்க மாநில ஏஐடியுசி-யின் பிரபல தலைவர்களில் ஒருவரான அருண்சென் என்பவர் தன் கண் பார்வை இழந்த நிலையிலும், மாநாட்டு ஆயத்தப் பணிகளில் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தார்.

மாநில ஏ.ஐ.டீ.யு.சி. பொதுச் செயலாளராக இருந்த கமலாபதிராயும், அனைத்திந்திய பொதுச் செயலாளராக இருந்த இந்திரஜித் குப்தாவும் மாநாட்டுப் பணிகளில் அருண் சென்னுக்குப் பக்க பலமாயிருந்து உதவி புரிந்து வந்தனர்.

கீர்த்தி வாய்ந்த கல்கத்தாவையும், இதர சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களையும் பார்த்துப் பயனுறும் பொருட்டு, என் மனைவி காமாட்சியை அழைத்துச் சென்றிருந்தேன்.

முதல் நாள் மாநாடு முடிந்த பிறகு, முப்பதாண்டுகளுக்கு முன்னால்தான் லண்டனில், வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று திரும்பப் பயன்பட்ட பழைய மோரிஸ் மைனர் காரில், வட கல்கத்தாவிலிருந்து தென் கல்கத்தா

www.tamilarangam.net



விற்குப் புறப்பட்டோம். ஓட்டுநர் இந்திரஜித் என்பது ஆச்சரியமாயிருந்தது.

என்னோடும் என் மனைவியோடும் சக பயணிகளாக நெருக்கியடித்து ஏறி அமர்ந்து கொண்ட, ஏ.ஐ.டி.யு.சி. யின் முன்னாள் தலைவர் டாக்டர் ரானேன் சென்னும், மாநிலப் பொதுச் செயலாளர் கமலாபதி ராயும் எங்களைத் தைரியப்படுத்தினார்கள். வண்டி பழையதாக இருந்தாலும், லண்டன் செல்லும் நண்பர்கள் மூலம் உதிரி பாகங்கள் ஒவ்வொன்றும் அவ்வப்போது புதிதாக வாங்கிச் சேர்க்கப்பட்டவை. எனவே புது வண்டி கூட இதனுடன் போட்டி போட முடியாது; அத்தனை வலுவானது. அதிலும், மிகவும் கெட்டிக்கார ஓட்டுநர் ஸ்டீயரிங் பிடித்திருப்பதால் ஆபத்து நேரும் என்று அஞ்ச வேண்டியதில்லை.

அந்த தைரியத்தில்தான் வேறு யார் வண்டியிலும் ஏறாமல் இந்திரஜித் காரில் வழக்கமாக ஏறிச் செல்கிறோம். அவர் கார் ஓட்டி வந்ததில் இதுவரை எந்தவொரு விபத்தும் ஏற்பட்டதில்லை என்று கேலிமாரி பொழிந்த வண்ணம், கல்கத்தா நெரிசலுக்கிடையே, எங்களது மறக்க முடியாத ஒருமணி நேரம் 20 நிமிடப் பயணம் தங்கு தடையின்றி முடிந்தது.

அக்கம் பக்கத்தில், எங்கள் சக்திக்கேற்ப, மலிவான வாடகைக்கு ஓட்டல் அறை எதுவும் கிடைக்கவில்லை. இதை நண்பர்கள் மூலம் தெரிந்து கொண்ட இந்திரஜித்துக்கு என் மீது ஆத்திரம் ஏற்பட்டு விட்டது. நாம் பழகிப்போன கரடு முரடான, வாழ்க்கைக்குப் பழக்கப்படாத குடும்பப் பெண்களை இப்படி வசதியின்றித் திண்டாட விட்டால், பொதுக் காரியங்களில் பங்கேற்கப் பயந்து ஓடும் 'சூடுகண்ட பூனையாகி' விடுவார்கள் என்று ஆவேசப் பட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தானே அலுவலக தொலைபேசியைப் பலமுறை பிரயோகித்தார். எதிர் முனையில் அவர் நாடிய அரசு அதிகாரி சிக்கினார். நாடாளுமன்ற உறுப்பினர் தங்கும் விடுதியில் ஒரு அறை தனது நண்பருக்கு வழக்கமான வாடகையில், அனுமதிக்கப் பட்ட மூன்று தினங்களுக்கு ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக் கொண்டார்.

என்னையொத்த சாதாரண தொண்டனுக்கு, ஆகப் பெரிய தலைவர் ஒருவர், இப்படி சமமான சமதர்ம உணர்வோடு நடந்து கொண்ட ஒப்பரிய அனுபவம் அபூர்வமாகவே கிட்டியது வாழ்வில் மறக்கவொண்ணாத தாகும். அவர் ஓர் அரிய அரசியல் தியாகி.

கம்யூனிஸ்டுகளுக்கும் நாடாளுமன்ற ஜனநாயகத் திற்கும் உள்ள உறவு 'முழங்காலுக்கும் மொட்டைத் தலைக் கும் முடிச்சுப் போட்ட மாதிரி' என்ற அரைவேக்காட்டுக் காரர்களின் நையாண்டியை புறமுதுகோடச் செய்து, மக்களவையின் தலைசிறந்த நாவலர் என்பதை, எதிராளி உள்ளிட்டு எல்லோரையும் ஏற்கச்செய்தவர்.

தொழிலாளி வர்க்க நலன்களைக் காக்க வேலை நிறுத்தம் நடத்துபவர் மட்டுமல்ல, அவர்களது நியாயங் களை மறுக்க இயலாத அறிவார்ந்த வாதங்களால் நீதி பதிகள் முன்பும், நடுவர்களிடமும், பல கட்சிப் பிரதிநிதி களிடமும் நிலை நிறுத்துவதில் வல்லவராய் இருந்தார்.

சமய சார்பற்ற கொள்கைகளில் அவர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்ததைப் பறைசாற்றுவதாக விளங்கு வது, அவர் படாடோபமின்றி முஸ்லிம் பெண்மணி யான 'சுரையா'வைத் திருமணம் செய்து கொண்டு பிறர் வியக்க வாழ்ந்து காட்டியவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்சியும் தொழிற் சங்கமும் நடத்தும் கிளர்ச்சி களின் நியாயத்தை ஆணித்தரமாக எடுத்துரைத்து, எழுச்சி யூட்டும் பல பிரசுரங்களைத் தீட்டியுள்ளார். ஆயிரக்கணக் கான கட்டுரைகளை, ஆங்கிலேயரும் ஆசைப்பட்டுப் படிக்கும் விதத்தில் எழுதி, இளைஞர்களின் இதய நாதத் தைத் தூண்டி இழுத்து, ஒலித்து எதிரொலிக்கச் செய்பவர். பெருநூல்களை எழுத அவர் விரும்பியதில்லை.

தெருக்களிலே ஊர்வலம் நடத்துவதிலும், ஆலை வாயிற் கூட்டங்களிலே முழங்குவதிலும், பொதுக் கூட்டங் களில் பிறகட்சிப் பார்வையாளர் நெஞ்சைப் பிணைக் கும் விதத்தில், சொல்மாரி பொழிவதிலும், மாநாடுகளில் எடுத்த தீர்மானங்களை சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் நிறைவேற்றுவதில் கண்ணுங்கருத்துமாயிருக்க வேண்டிய அவசியத்தை பசுமரத்தாணியாகப் பதிய வைப்பதிலும் யாருக்கும் சளைத்தவரல்ல.

பிரச்சினைகளை சங்க, கட்சிக் குழுக்களில் பேசும் போது, கோணல்வாதம் பேசுவோரைச் சாமானியமாக விடமாட்டார். மட்டந்தட்டவும் துணியார். கூர்மையாக அம்பலப்படுத்துவார். தந்தை கண்டிப்புடன் நடந்து கொள்ளத் தவறாத அவரிடம், அடுத்த கணமே, தாயன்பு பீறிட்டுப் பாய்வதைக் காண முடியும். இதனால், விமர் சனத்துக்கு இலக்கானவரும் மனம் நோகமாட்டார்.

தனக்கு மூத்தவர்களாகவும், குருநாதர்களாகவும் கட்சிக்குள் திகழ்ந்த ஒரு பகுதி தோழர்கள் 1964-வாக்கில் அரசியல் மாறுபாடு கொள்ள நேர்ந்த போது மனம் புழுங்கினார். ஆயினும் அந்த நேரம் தன்னுடனிருந்த எஸ்.ஏ. டாங்கே போன்ற பிரபல தலைவர்கள், பின்னர் வேறுவிதமாகக் கருத்து வேற்றுமை கொண்ட போது, அவர் அதையும் ஏற்றுக்கொண்டதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தான் கற்றறிந்த மார்க்ஸிஸ-லெனினிஸ - பாட்டாளி வர்க்க சித்தாந்தங்கள், அனுபவங்கள் ஆகியவற்றை உரை கல்லில் ஒவ்வொரு நிகழ்ச்சிப் போக்கையும் உரசிப் பார்த்து, தனக்குச் சரி என்று பட்டதையே உறுதியோடு கடைப்பிடித்த உத்தமர் அவர். அதனால்தான், கட்சி பிரிந்த பின்னரும், வேறு கட்சியில் இடம் பெற்ற அந்தத் தலைவர்கள் மீது தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காட்டாதவ ராக இருந்தார்.

ஒரு கம்யூனிஸ்ட், சமுதாய நிகழ்ச்சிகளை விஞ் ஞான அடிப்படையிலும், யதார்த்த முறையிலும் ஆய்ந்து சரியான முடிவுகளைத் துல்லியமாகக் கண்டறிய வேண் டும். அந்த முடிவுகளுக்கு ஆதரவு திரட்டப் பிரச்சாரம் செய்வதும், அவை வெற்றி வாகை சூடப் பாடுபடுவ தும் இன்றியமையாக் கடமையாகும்! அதிகாரம் யாருக்கு? என்ற கேள்விக்கு, இன்ன கட்சிக்கோ அதன் கூட்டணிக்கோ என்று விளங்காமல் பேசிப்பயனில்லை. இறுதி வெற்றி பாட்டாளி வர்க்கத்திற்கே; சுரண்டல் ஒழிய வேண்டும்; எல்லோரும் ஓர் நிறை; எல்லோரும் சமம் என்பது உறுதி யாக வேண்டும். சமதமர்ம சமுதாயம் மலர்ந்தால் தான், மனிதன் மனிதனாக மகிழ்ச்சி பொங்க வாழ்வான். அதற் காக ''மேலைக்கு வாக்கப்படலாம்; கழுத்தே சும்மாயிரு!' என்பது போன்ற இதேபதேசம் எடுபடாது.

பதினோரு முறை மக்களவைக்கு அவர் தேர்ந் தெடுக்கப்பட்டது, அவரிடம் மக்கள் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் ஆகும். ''சொல்வதைச் செய்வார்; செய்வதைச் சொல்வார்'' - என்பதில் வாக்காளர்களே அசைக்க முடியாத அபிப்பிராயம் கொண்டிருந்ததே அவரது வெற்றிக்கு அடித்தளம் ஆயிற்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நமது சமூகம், நாடு, உலகம் சம்பந்தப்பட்ட அத்தனை சமாச்சாரங்கள் மீதும் ஆழ்ந்த சிந்தனையில் பிறந்த அருமருந்தான அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார். அத்தனையும் ஈடு இணையற்ற அறிவுக்களஞ்சியங்களாக இன்றைக்கும் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன. அவை, நடைமுறை மார்க்சீய சித்தாந்த ஒளிவிளக்கு சிந்திய, அஞ்ஞான இருளை விரட்டியடிக்கும் ஒளிக்கதிர்களாகும்.

தொழிலாளர்கள் முரட்டுக்குணம் படைத்தவர்கள்; அறிவொளியை மதிக்காதவர்கள்; அவர்களின் தலைவர்களும் அதே ரகம்தான் என்று, அறியாமையிலும் நாக்குத் தடிப்பிலும் உளறுவோரின் பிதற்றலுக்கு இந்திரஜித் மணிவாசகங்கள் சரியான மாற்று மருந்தாகும். அந்த ஆவணங்கள் அனைத்தும் பல நூல்களாக விரைவில் வெளியிடப்படுவது, அவருக்கும் நாடாளுமன்ற ஜனநாயக மேன்மைக்கும் நாம் செலுத்தும் உன்னத காணிக்கையாகும்.

நாடு செல்லும் நலிவுற்ற பாதை கண்டு, அவநம்பிக்கையில் குழம்பித் தடுமாறும் இந்திய இளைஞர்கள் புதிய எழுச்சி பெற ஊக்குவிக்கும் சமய சஞ்சீவியாகும்.

ஊராட்சி, ஒன்றிய, நகர், வட்டார, மக்களவை உறுப்பினர் பதவிக்கே மிகப் பெரும்பாலான அரசியல் கட்சியினர் தவங்கிடக்கின்றனர். இவ்வளவு காலம் இந்தக் கட்சியின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்ட தனக்கு, இது மாதிரியான பதவியில் அமர வாய்ப்பில்லை என்றால், நாங்களும் எங்கள் குடும்பமும் ''பிழைப்பதெப்படி?'' என்று உரத்த குரலில் ஒப்பாரி வைத்துப்புலம்பும் பட்டாளம் பெருகி வருவதைப் பார்க்கிறோம்.

www.tamilarangam.net



வெட்கத்தை விட்டு, ''பிழைப்பு நடத்தவே பதவி'' கேட்கும் சோதனை மலிந்த காலத்தில் மத்திய ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் அங்கம் வகிக்க இந்திரஜித் குப்தா சாமான்யமாக சம்மதித்தாரா?

பிரதமருக்கு அடுத்த முக்கியத்துவம் உள்ள உள் துறை அமைச்சர் பதவிக்கு நாக்கில் நீர் சுரக்கக் காத்திருப் போர் ஏராளமானோராயினும், அந்தப் பதவி தனக்கு வேண்டவே வேண்டாம் என இந்திரஜித் குப்தா மறுத்து விட்டார். அவரை இணங்கச் செய்ய முன்னணிக் கட்சிகள் அனைத்துமே பெரும்பிரயாசை ஏற்றுக் கொள்ள வேண்டி யிருந்தது நாடறிந்த சங்கதி.

அத்தனை சகோதரக் கட்சிகளும் சேர்ந்து, ஒரு கம்யூனிஸ்ட்டான தோழர் இந்திரஜித் குப்தா தான் இந்தப் பொறுப்புக்குத் தகுதியானவர் என்று ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்தது கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கிடைத்த மிகச் சிறந்த அங்கீகாரம் ஆகும்.

''மந்திரி என்றாலே மடிமாங்காய் திருடி'', ''ஊழ லின் ஊற்றுக்கண்'' - என்று அண்மைக் காலத்தில் ஒரு ''புதிய திருவாசகமே'' பிரபலம் அடைந்துள்ளது. இந்தச் சூழலில் 'நேர்மையின் உறைவிடம்' கம்யூனிஸ்டுகள் என்ற இலக்கணத்தை இந்திரஜித் குப்தா படைத்துக் காட்டி னார். இதர கம்யூனிஸ்ட் அமைச்சர்களும் இதே சத்தியப் பாதையில் நடை போட்டு வருவது, 'இந்திரஜித்' சிருஷ்டித்த சிறப்பியல்பாகும்.

இந்திரஜித் குப்தா எப்போதுமே எளிமையின் சின்னமாக விளங்கினார். தன்குடும்பப் பாரம்பரிய பொரு ளாதார செல்வாக்கை அவரது எண்ணத்திலோ, உணர்வு களிலோ வெளிப்படுத்தியதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தனக்கு வரும் கடிதங்களுக்குத் தானே, அஞ்சல் அட்டையில் அப்போதே. தன் கைப்பட்வே பதில் எழுதி விடும் நல்ல பழக்கத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்தார். முக்கிய தோழர் பலரிடம் இப்படி அவர் வரைந்த ஏராள மான கடிதங்கள் இருக்குமென்பதில் ஐயமில்லை.

மேற்கு வங்கத்தில், புதுடெல்லியில், லண்டனில் பல்கலைக் கழகங்களில் படித்து, பல பட்டங்களைப் பெற் றிருந்தாலும், அவற்றில் ஒன்றைக் கூட தன் பெயருடன் சேர்த்து அச்சிட்டுக் கொண்டதில்லை. வார்ஸாவில் நடந்த உலகத் தொழிற் சங்க சம்மேளன மாநாட்டிற்கு இந்திரஜித் குப்தா தலைமையில் ஒரு குழு சென்றது. அக்குழுவில் நானும் பங்கு பெற்றிருந்தேன். மாநாடு முடிந்து இரவு விருந் துக்காக எல்லா நாட்டினரோடும் சேர்ந்து காத்திருந்தோம்.

அப்போது அங்கு வந்து சேர்ந்த இந்திரஜித் குப்தா விடம்,பட்டப்படிப்பை பெயருக்குப் பின்னால் சேர்த்துக் கொள்ளாதது ஏன் என்று கேட்டேன்.

தான் படித்தபோது தொழிலாளர்களில் பட்ட தாரிகள் தப்பித் தவறிக்கூட இருந்ததில்லையாம். இந் நிலையில், அவர்கள் தலைவராக உள்ள நான், என் பட்ட வரிசைகளைப் பெயருக்குப் பின்னால் போட்டு விளம்பரப் படுத்துவது, அவர்களைச் சிறுமைப்படுத்துவதாகி விடுமோ என்ற அச்சத்தாலேயே, அதற்குத்தான் அப்படி யொரு முக்கியத்துவம் தரவில்லை என்பதைத் தெளிவு படுத்தினார்.

ஏ.ஐ.டி.யு.சி. மாநாட்டுக்கான அறிக்கையை அவர் தனது கைப்படவே தயாரித்துக் கொடுப்பார். அந்த அறிக்கையில் அவர் பயன்படுத்தும் வார்த்தைகள் கூர்மை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யும் ஆழ்ந்த அர்த்தமும் கொண்டவை. அவரது எழுத்து வரிகள் சாகாவரம் பெற்றவை.

உலக தொழிற் சங்க சம்மேளனத்தின் பொறியியல் தொழிலாளர் சர்வதேச சங்கத்தின் துணைத் தலைவராக - ஏ.ஐ.டி.யு.சி.யால் தேர்ந்தெடுக்கப்பட்டு சுமார் பத்தாண்டு காலம் அப்பொறுப்பில் பணியாற்றினேன். சங்கத்தின் தலைமை அலுவலகம் மாஸ்கோவில் இருந்தது.

நான்கு மாதங்களுக்கு ஒருமுறை தலைமைச் செய லகம் செல்வது கட்டாயமாயிருந்தது. நிர்வாகக் குழுக் கூட்டம் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை உலகின் பல்வேறு நாடுகளில் கூடும். அங்கு ஆற்ற வேண்டிய உரை, தாக்கல் செய்ய வேண்டிய ஆவணம் அனைத்தும் தயாரித் துக் கொண்டு போய், ஆலோசனை கேட்டால், முதலில், நேரமில்லை என்று தட்டிக் கழிப்பார். பின்னர் சிறிது நேரம் கழித்து அழைப்பார். ஒரு மணி நேரத்துக்கு மேல் செல விட்டு, பல ஆலோசனைகள் வழங்குவார்.

ஒரு அதிர்ச்சியும் ஆச்சரியமுமான சம்பவத்தைச் சொல்லாமல் இருக்க முடியாது.

உலக பொறியியல் தொழிலாளர்களின் சர்வதேச சங்க நிர்வாகக் குழுக் கூட்டம் துருக்கி தொழிற்சங்கமையத் தால் நடத்த அழைக்கப்பட்டது. உலகப் புகழ்பெற்ற இஸ்தான்புல் நகரில் கூட்டத்துக்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. மாஸ்கோவிலிருந்து 12 மணி நேர இடை விடாத விமானப் பயணத்தை மேற்கொண்ட பிறகு, களைப்பு தவிப்போடு இஸ்தான்புல் நகரத்துக்கு வந்து சேர்ந்தேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வழக்க்ம் போல், வெளிநாடு செல்லும்போதெல்லாம் நம்மை விருந்தினராகத் தருவிக்கும் நாட்டின் நமது இணைப்பு சங்க பிரமுகர்கள் தமது சங்கக் கொடிகளுடன், பயணியாக வருவோரின் பெயரை பிரெஞ்ச் மொழியிலும், ஆங்கிலத்திலும் அட்டையில் எழுதிப் பிடித்துக் கொண்டு, விமான நிலைய நுழைவாயிலில் காத்திருப்பார்கள். அந்த அடையாளத்தை வைத்து நம்மை அழைத்துப் போக வந்தவர்களிடம் சேர்ந்து கொள்வது வாடிக்கையாகும். இந்தத் தடவை அப்படி யாரும் வரவில்லை. அப்போதெல்லாம், இந்திய அரசு அனுமதிக்கும் - அதுவும் கைச்செலவுக்கு - 8 டாலர் மட்டுமே என் கைவசமிருந்தது. இரண்டு டாலர் கொடுத்து காபி சாப்பிட்டேன். மீதம் இருந்த 6 டாலரைக் கொடுத்து ஒருவேளை சோறு கூடச் சாப்பிட இயலாது. அந்நாட்டு விலைவாசி அப்படி!

காவல் துறையினரை அணுகிய போதுதான் சிக்கல் நிறைந்த விபரம் புரிந்தது. நான் விமான நிலையத்தில் வந்திறங்கி காலடி எடுத்து வைத்த நேரத்தில் தான் தளபதி 'டிமிள்ல' தலைமையில் ராணுவம் புரட்சி செய்து ஆட்சியைப் பிடித்திருந்தது.

எங்கள் மாநாட்டைத் திறந்து வைக்கச் சம்மதித்து, அதற்கான சௌகரியங்களையெல்லாம் தொழிற்சங்க அமைப்பிற்குச் செய்து தந்து கொண்டிருந்த அந்நாட்டுப் பிரதமர் கவிஞர் எஜிவெட் வீட்டுக்காவலில் வைக்கப் பட்டிருந்தார்.

இந்திய பாஸ்போர்ட்டுக்கு உலகெங்கும் ஒரு மரியாதை உண்டு. இது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

நான் துருக்கியில் 15 நாட்கள் தங்கியிருக்க, இந்தியாவில் உள்ள அந்த நாட்டின் தூதரகம் விசா வழங்கி இருந்த

www.tamilarangam.net



தைரியமும் என்னுடன் சேர்ந்து கொண்டது. ராணுவ அதிகாரிகளும் ஒத்தாசை புரிந்தனர்.

'மர்மாரா' கடற்கரைச் சாலையில் 40 கிலோ மீட்டர் பயணத்துக்குப்பின், ஓர் அற்புதமான ஓட்டலுக்கு வந்து சேர்ந்தேன். ஓட்டலின் 17வது மாடியில் எனக்கு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. நல்ல சாப்பாடு; உற்சாகம் கலந்த உபசரிப்பு.

எனக்கு நேர்ந்த சோதனை பற்றி, புதுடில்லியில் வெஸ்டர்ன் கோர்ட் வீட்டிலிருந்த இந்திரஜித் குப்தாவுடன் பேசினேன். அவர் இரவெல்லாம் கண்விழித்து, இந்திய வெளிவிவகாரத்துறை செயலர்களையும் அமைச்சர்களையும் குடைந்தெடுத்திருக்கிறார். மறுநாள் காலை 5 மணிக்கு எனது அறையின் தொலைபேசி ஒலித்தது. துருக்கி ராணுவத்தின் முக்கிய அதிகாரி நேரடியாகத் தொலைபேசியில் பேசி, நடந்த சம்பவங்களுக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

என்னை அழைத்த மாநாட்டுப் பிரதிநிதிகள் விடுவிக்கப்பட்டதாகவும், அதிகாலை அவர்கள் என்னைப் பொறுப்பேற்றுக் கொள்வார்களென்றும், எந்த உதவி வேண்டுமானாலும் செய்யத் தயாரென்றும் உறுதியளித்தார்.

ஆட்சி மாற்றத்தால், தலைமறைவாகி பதுங்கியிருந்த அந்நாட்டு தொழிற்சங்கப் பிரதிநிதிகள், ராணுவத்தின் அனுமதியோடு, ஓட்டலுக்கு வந்து, என்னை அன்புடன் அழைத்துச் சென்றனர். மூன்று நாட்கள் நடைபெற்ற மாநாடு எவ்வித அசம்பாவிதமுமின்றி அமைதியாக நடந்தேறியது. மாநாட்டு நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு ஒரு வாரம் கழித்து டெல்லி விமான நிலையத்தில் வந்திறங்கினேன்.

www.tamilarangam.net



மலர்க் கொத்துடன் அங்கு வந்து என்னை வர வேற்று, தன் காரிலேயே ஏ.ஐ.டி.யு.சி. அலுவலகத்திற்கு அழைத்துச் சென்ற இந்திரஜித் குப்தாவை நினைத்தாலே கண்கள் குளமாகின்றன.

வந்திறங்கும் தலைவனை வரவேற்க பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள் திரட்டப்படுகிற நம் நாட்டில், சாதாரணத் தொண்டனை வரவேற்க, உலகப் புகழ் வாய்ந்த மாபெரும் தலைவனே வரும் புதுமை, இந்திரஜித் குப்தா அவர்களாலும், அவர் சார்ந்துள்ள கட்சியாலும் தான் நிகழும் என்ற எடுத்துக்காட்டு என்றும் அழியாது; நிலைத்து நிற்கும்.

வாழ்க இந்திரஜித் நாமம்.

★★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ''மனிதருள் மாணிக்கம்'' இந்திரஜித் குப்தா!

எல்.ஜி. கீதானந்தன்

தோழர் இந்திரஜித் குப்தா அமரராகிவிட்டார்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

என்றார் வள்ளுவர். அத்தகைய உயர் நிலையைப் பெற்றவர் இந்திரஜித் குப்தா. இந்தியாவின் அனைத்துப் பத்திரிக்கைகளும், அனைத்துக் கட்சிகளின் அரசியல் தலைவர்களும் அவரை நெஞ்சார புகழ்ந்தனர். சம்பிரதாயமாகவின்றி, உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர். காங்கிரசைச் சேர்ந்த திரு. ஜெய்பால் ரெட்டியின் கட்டுரை அத்தகைய உணர்வு பூர்வமான வெளிப்பாடுகளிலொன்றாகும்.

பிரதமர் வாஜ்பாய் தனது புகழஞ்சலியில், இந்திரஜித் குப்தாவின் போற்றத்தக்க எளிமையை அனைத்து அரசியல் வாதிகளுக்கும் எடுத்துக்காட்டாகக் கூறினார்.

பதினொரு முறை பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திரஜித் குப்தாவின் செழுமையும் பண்பாடும் நிறைந்த பாராளுமன்ற உரைகளை இன்று அனைவரும் நினைவு கூறுகின்றனர். அவருடைய பேச்சு, வார்த்தை ஜாலம் மிகுந்ததல்ல; எடுத்துக்கொண்ட பொருளை முழுமையாக ஆய்ந்து, தர்க்க வாதங்களுடன் எதிர்வாதங்களை முறியடிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். பாராளுமன்றத்தில் உறுப்பினராகி பேசாமடந்தைகளாக வீற்றிருப்போருண்டு. எந்த சப்ஜட்டையும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படிக்காமல் சண்ட மாருதம் வீசுவோருண்டு. பாராளு மன்றத்திலேயே குறட்டை விட்டு அதிர்ஷ்டமில்லை யென்று அலட்டிக்கொண்டோருமுண்டு. பாராளுமன்ற உறுப்பினர் பதவிச் சுகத்தை அனுபவித்துக் கொண்டு, லஞ்சலாவண்யங்களில் மிதந்தோருண்டு. அவர்களுக் கிடையிலே, தனது சொல்லாலும், செயலாலும் நாட்டு நலன் பேணி உழைப்பவர் நலம் காத்து, பாராளுமன்றத் தில் ராஜதாமரையாக வீற்றிருந்தார். அதனால்தான் 1992-ம் ஆண்டில் மிகச்சிறந்த பாராளுமன்றவாதியாக பாராளு மன்றத்தில் சிறப்பிக்கப்பட்டார்.

பாராளுமன்ற வரலாற்றில் பீடு நடைபோட்ட பூபேஷ் குப்தா, எஸ்.ஏ. டாங்கே, ஹிரேன் முகர்ஜி, எஸ்.எம். பானர்ஜி, ஏ.கே. கோபாலன், நிகில்சக்ரவர்த்தி, மோகன்குமாரமங்கலம், என்.கே. கிருஷ்ணன், பார்வதி கிருஷ்ணன் ஆகியோர் வரிசையில் தனியிடத்தைப் பெற்றுத் திகழ்கிறார் இந்திரஜித் குப்தா!

உள்துறை அமைச்சராக இருந்த போதும், பந்தாக் கள் ஏதுமின்றி, 'ஒப்பரிகைக்காற்றெதிரே உழைப்பாளர் பெருமூச்சை செப்புமொரு படைக்கலனாய்' (கவிஞர் சிற்பி) திகழ்ந்தார். 20 லட்சம் மத்திய அரசு ஊழியர்களின் 5-வது ஊதியக்குழு பரிந்துரையை அமுல்படுத்துவதில், பல முட்டுக்கட்டைகள் இருந்த போதிலும், அதற்கென வாதாடி, அதனை அமுல்படுத்துவதில் வெற்றி பெற்றார். மத்திய அரசின் ஒரு உள்துறை அமைச்சர் போல நடந்து கொள்ளாமல், ஒரு தொழிற்சங்கத் தலைவர் போலவே, அரசு ஊழியர்கள் சார்பில் வாதாடினார் என சிலர் குறை பட்டுக்கொண்டனர்.

ஐக்கிய முன்னணி அரசில் மத்திய அரசு ஊழியர்கள் பால் அவர் காட்டிய அணுகுமுறைக்கும், இன்றைய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆட்சியின் அணுகுமுறைக்கும் தான் எத்தனை வேறுபாடு! வருடம் 2 சதவீதம் மத்திய அரசு ஊழியர்களை குறைத்திட இன்றைய அரசு முடிவு செய்துள்ளது. யார் ஆண்டால் என்ன என்று நினைப்பவர்கள், இந்த உதாரணத்தின் மூலம் யார் ஆள வேண்டும் என்பதை உணர்வார்கள் என்பதில் ஐயமில்லை.

உள்துறை அமைச்சராக அவர் செயல்பட்ட போது, முதல் முறையாக காஷ்மீர் தீவிரவாத குழுக்களுடனும், வட கிழக்கு மாநிலக் குழுக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார். காஷ்மீர் தீவிரவாதத் தலைவர்களை விமானம் மூலம் டெல்லிக்கு அழைத்து, அனுதாபத்துடன் அவர்களது பிரச்சினைகளை அணுகி தீர்விற்காக முயன்று வந்த நிலையில், ஆட்சி கவிழ்க்கப்பட்டது. இதற்கு முன் எந்த உள்துறை அமைச்சரும் இவ்வளவு அனுதாபத்துடனும், பரிவுடனும் எங்களிடம் நடந்து கொண்டதில்லை என தீவிரவாதக் குழுவினரே கூறுமளவுக்கு அவருடைய செயல்பாடு அமைந்திருந்தது.

''இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு அனைத்துத் தரப்புமக்களும் மதிக்கக்கூடிய, இந்தியா முழுமையிலும் நன்கறிந்த தலைவர்கள் இல்லாதது பெருங்குறை'' எனக் கூறுவாருண்டு. அவர்களது கூற்றினை பொய்யாக்கும் விதத்தில், இந்திரஜித்குப்தா அனைத்துத் தரப்பினராலும் மதிக்கக்கூடிய, இந்தியா முழுவதும் நன்கறிந்த தலைவராக விளங்கினார். அவரது வரிசையில் பல தலைவர்களுள்ளனர்.

இந்தியாவில் ஹவாலா மோசடி நடந்தபோது பல கட்சிகளின் தலைவர்கள் அதில் சம்மந்தப்பட்டிருந்தனர். கம்யூனிஸ்ட்டுகளும் ஹவாலா மோசடியில் பங்குபெற்றிருந்தால், ஹவாலா மோசடி அகில இந்திய மயமாகி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யிருக்கும் என தினமணி எழுதியது. கறைபடாத கரத்துக்கு சொந்தக்காரர்கள் கம்யூனிஸ்ட்டுகளே என்பதை இந்திரஜித் குப்தா போன்ற தலைவர்களின் வாழ்க்கை எடுத்துக்காட்டி யுள்ளது.

கோவையில் 7 நாட்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி யின் தேசியக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அகில இந்திய மாநாட்டிற்கான பல ஆவணங்கள் அக்கூட்டத்தில் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டன. அக்கூட்டத்திலும், அதன் இறுதியில் நடந்த பேரணி பொதுக்கூட்டத்திலும் அவர் ஆற்றிய பேருரைகள், அவரின் கம்பீர தோற்றப் பொலிவு இன்னமும் நெஞ்சில் நிழலாடுகிறது.

இன்றுள்ள அரசியல் கேவலங்களை, கிரிமினல் களை, ஆஷாடபூதிகளை, பம்மாத்துக்களை, ஆடம்பர அரசியல் வாதிகளை, ஊழலின் உறைவிடங்களைக் காணும்போது, உருவிய வாளென ஒளிவீசிய நேர்மைத் திறம் குன்றா இந்திரஜித் குப்தா 'மனிதருள் மாணிக்கம்' என்பதில் ஐயமில்லை. அவர் நினைவைப் போற்று வோம்! அவர் வழி நடப்போம்!

★★★

www.tamilarangam.net

# புரட்சியின் இலக்கணம்

எஸ். ஜெய்பால் ரெட்டி
(நாடாளுமன்ற உறுப்பினர்,
காங்கிரஸ் கட்சி செய்தி தொடர்பாளர்)

இந்திரஜித் குப்தா அவர்களின் வாழ்க்கை முறை மிகவும் எளிமையாக இருக்கலாம். ஆனால் அவருடைய உணர்வும் அறிவாற்றலும் மிகப் பரந்தவை.

பல்வேறு வகைகளில் புகழ் வாய்ந்த மனிதர் இந்திரஜித் குப்தா. கடந்த அறுபது ஆண்டுகளாக அவர் பொது வாழ்க்கையில் பல்வேறு களங்களில் பணியாற்றி யிருக்கிறார்.

இன்ன துறையில்தான் அவர் மிகச்சிறந்து விளங்கி னார் என்று ஏதாவதொரு துறைஙயக் காட்டவும் முடி யாது. அனைத்துத் துறைகளிலும் அவர் சிறந்து விளங்கினார். அவரது பங்களிப்புகளை ஒரே மூச்சில் சொல்லிவிட வும் முடியாது.

நான் அவரோடு நாடாளுமன்றத்தில் பணியாற்றும் பேறு பெற்றிருந்தேன். ஆகவே, அவருடைய அப்பழுக்கற்ற பல பங்களிப்புகள்தான் உடனடியாக என் கண்முன்னால் நிற்கின்றன.

நமது தலைமுறையின் மிகச் சிறந்த நாடாளு மன்றவாதியாக அவரை நான் மதிக்கிறேன். மிகச்சிறந்த நாடாளுமன்றவாதி எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டப் பட்ட முதல் மனிதர் அவர்தான் என்பது மிகச்சரியானதே.

www.tamilarangam.net



இந்திரஜித் குப்தாவிற்கு இணையான காலம் நாடாளுமன்றப் பணியாற்றிய நமது பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் தான் அப்படிப் பாராட்டப்பட்ட இரண்டாமவர்.

சத்தியமூர்த்தி, சியாமபிரசாத் முகர்ஜி, ஹிரேன் முகர்ஜி, புபேஷ் குப்தா, நாத்பாய் போன்றவர்கள் முதல் மதுலிமாயி வரை எத்தனையோ பெரிய நாடாளுமன்ற வாதிகளை நவீன இந்தியா கண்டிருக்கிறது. இந்திரஜித் குப்தா இந்த வரிசையைச் சேர்ந்தவர்தானென்றாலும் அவர் தன்னேரில்லாத் தனித்தன்மையுடன் விளங்கினார்.

அவர் செல்வச் செழிப்புள்ள ஒரு குடும்பத்தில் பிறந்தவராக இருந்தாலும், செயிண்ட் ஸ்டீஃபென்ஸ் கல்லூரியிலிருந்து கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகத்திற்குச் சென்றவராயிருந்தாலும், ஆங்கில நாட்டு அறிவாளிகளைப் போன்று இயல்பாகவே ஆங்கிலத்தைப் பேசினாலும் துணிச்சல் மிகுந்த அடாவடித்தனம் அவரிடம் காணப்பட்டதில்லை.

அவர் நல்ல பேச்சாளர் என்பதைவிட, சிறந்த வாதத்திறமை உடையவராகத் திகழ்ந்தார்.

நாடாளுமன்றத்தில் பேசும்போது பகட்டு ஆரவாரமாக முன்னுரை, முடிவுரை எல்லாம் கூறி படோடாபமாகப் பேசமாட்டார். எதைப்பற்றிப் பேச வேண்டுமோ அந்த விஷயத்தைப் பற்றி நேரடியாகப் பேச ஆரம்பித்து விடுவார். எளிய முறையில் புரியும் வகையில் பேசுவதில் அபாரத் திறமையுடையவர்.

எந்த வகையிலும் என்னை அவரோடு ஒப்பிட முடியாது. அப்படி ஒப்பிடுவது தகாதது. என்னுடைய பேச்சு

www.tamilarangam.net



நடை தவிர்க்க முடியாதபடி கடினமான சொல் நயமிக்க தாக இருந்தாலும், நான் அவரைவியந்து பாராட்டினேன்.

சிறிய கட்சியின் தலைவராக இருந்ததால், எந்த விஷயமாக இருந்தாலும், அவர் கடைசியில் பேசுகிறவர்களில் ஒருவராக இருப்பார். இருந்தாலும் எப்பொழுதும் புதிய கருத்துக்களை முன் வைத்துப் பேசுவார். ஆகவே, அவர் பேச்சை அடிப்படையாகக் கொண்டுதான் அரசுத் தரப்பின் பதில் அமையும்.

1930-களின் பிற்பகுதியில் அவுர் கேம்ப்ரிட்ஜை விட்டு வந்து விட்டாலும், கேம்ப்ரிட்ஜ் அவரை விட்ட மாதிரி தெரியவில்லை. அவர் எப்பொழுது பேச எழுந்தாலும், கேம்ப்ரிட்ஜின் பாதிப்புத் தெரியும். அவர் ஏற்றுள்ள தீவிரமான பொதுவுடமைக் கொள்கை காரணமாக விளைந்த அவரின் எளிய, ஆரவாரமில்லாத நடை, அவரது விரிந்து பரந்த புலமையையே பொய்யாக்குவது போலிருக்கும்.

நிதியிலிருந்து அயல்துறை வரை, பாதுகாப்பிலிருந்து தொழிலாளர் நலம் வரை எந்தப் பிரச்சினையாயிருந்தாலும் ஆதார உறுதியோடு பேசக்கூடியவர். பதினோறு முறை நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர். இது ஒரு தனித் தன்மை வாய்ந்த சாதனையாகும். நீண்ட காலத்திற்கு இச்சாதனை முறியடிக்கப்படாமலிருக்கலாம். ஒருவேளை இது முறியடிக்கப்பட்டாலும், அவருடைய நாடாளுமன்றப் பங்களிப்புகள் ஈடு இணையில்லாமல் எப்பொழுதும் போற்றப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

அவர் மூலமுதலாக ஒரு நாடாளுமன்றவாதி என அரசியல் நோக்கர்கள் மதித்தாலும், அவர் தன்னை ஒரு தொழிற்சங்கவாதியாகத்தான் கருதி வந்தார்.

www.tamilarangam.net



கேம்ப்ரிட்ஜில் மாணவராக இருந்த போதே பொதுவுடைமைக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட அவர், கடந்த அறுபதாண்டு காலம் தொழிலாளர் இயக்கங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். உள்துறை அமைச்சராக இருந்தபோதும் அவர், உள்ளத்தால் ஒரு தொழிற்சங்கவாதியாகத்தான் இருந்தார்.

ஐ.கே. குஜ்ரால் அமைச்சரவையில் நான் அவரோடு அமைச்சராகவும், ஐந்தாவது ஊதியக் குழு அறிக்கையை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட அமைச்சர் குழுவில் ஒருவராகவும் நான் இருந்தபோது நிகழ்ந்த ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது.

மத்திய அரசு ஊழியர் சங்கங்களின் ஒன்றிணைந்த செயற்குழுவினருடன் நடத்திய பேச்சுவார்த்தை ஒரு முக்கியமான கட்டத்தை எட்டியபோது, அமைச்சர்கள் குழுவின் தலைவர் என்ற முறையில், வீட்டு வாடகைப் படி விஷயத்தை குப்தா எழுப்பினார். 'ஊதியக் குழுவின் சிபாரிசுகளை நாம் ஏற்று நடக்க வேண்டும்' என்றார். இந்த யோசனையினால் மேலும் 500 கோடி ரூபாய் அதிகம் செலவாகும் என்பதால், ஏற்கனவே ஒரு ஒப்பந்தம் தவறாகத் தொழிலாளர்களுக்கு ஆதரவாகப் போடப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, அவரிடம் தனிமையில் என் எதிர்ப்பைத் தெரிவித்தேன். தாராளமாகக் கொடுக்கப்பட்டிருந்ததை அவர் நன்கு அறிந்திருந்தபோதும், ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி வீட்டுவாடகைப்படியையும் அனுமதிக்கலாமே என்று அவர் நினைத்தார். முழுக்க முழுக்க தொழிற்சங்க சார்பு நாட்டமுடையவராக இருந்த போதும், அவர் நடைமுறை யதார்த்தங்களை ஏற்றுக் கொள்பவராக இருந்ததால், அவரை நான் ஒப்புக்கொள்ள வைக்க முடிந்தது. பேச்சுவார்த்தை நீண்டு கொண்டே போனதால், எங்களிடையே இந்த விவாதம் மிக அதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலையிலேயே நடைபெற்றது. அன்று காலையிலேயே ஹைதராபாத்துக்குச் சென்றுவிட்ட குப்தா, தன்னுடைய கட்சி நண்பர்களிடம் என்னுடன் நடந்த விவாதம் பற்றி திறந்த மனதுடன் பாராட்டிப் பேசியிருக்கிறார்.

உள்துறை அமைச்சராக அவர் இருந்தபோது தனது இயல்பு நிலையில் இருக்க முடியவில்லை என்பதுதான் அனுபவம். உள்துறை அமைச்சராக இருந்தபோது உண்மை யிலேயே பெரிதும் மன உளைச்சலுடன் ஆளும் கட்சிக்கு உண்மையுள்ளவராக இருந்தார். எதிர்க் கட்சியினருக்குத் தீங்கில்லாமல் நேர்மையாளராக நடந்து கொண்டார்.

இந்திரஜித் குப்தா ஒரு மிகச் சிறந்த நாடாளு மன்றவாதியோ, அர்ப்பண உணர்வு உள்ள தொழிற்சங்க வாதியோ மட்டுமல்ல; அவர் ஒரு மிகச் சிறந்த மனித நேயர்!

ஆடம்பரமில்லாத வெஸ்டர்ன் கோர்ட் அறையில் நாற்பது ஆண்டுகள் தங்கியிருந்தார். மத்திய உள்துறை அமைச்சரான பின்னாலும், அந்த எளிய வாழ்விடத்தி லிருந்து நகர மறுத்துவிட்டார். டெல்லியிலுள்ள வெஸ்டர்ன் கோர்ட் உண்மையிலேயே அவருடைய அப்பழுக்கற்ற எளிமையை விளக்கும் சின்னமாக நிற் கிறது.

உள்துறை அமைச்சராக இருந்தபோதும் தொடர்ந்து நாடாளுமன்றத்திற்குப் போக்குவரத்துப் பேருந்தில்தான் வந்து கொண்டிருந்தார்.

இந்திரா காந்தி முதல் வாஜ்பாயி வரையில் எல்லாப் பிரதமர்களும் தன்னுடைய பேச்சை மிகக் கவனமாகக் கேட்குமளவு மிகச் சிறந்த நாடாளுமன்றவாதியாக இருந்தபோதும், உள்துறை அமைச்சராக இருந்தபோதும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாடாளுமன்றத்தின் மத்திய மண்டபத்தில் வந்துதான் காபி சாப்பிடுவார். அவரின் சக உறுப்பினர்களெல்லாம் இதனைப் பாராட்டுவார்கள். அரசியல் நோக்கர்களெல்லாம் கண்டு அதிசயிப்பார்கள். உள்ளத்தாலும் எண்ணத்தாலும் மிகச் சிறந்து நின்ற அவரை, உலகமே வியந்து பாராட்டினாலும், அப்பாராட்டுக்களால் அகங்காரம் கொள்ளாதவர்.

தன்னிலும் இளைய உறுப்பினர்களை, அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, அவர்களை ஊக்கப் படுத்துவதற்காகத் தாராளமாகப் பாராட்டுவார். நாடாளு மன்ற நடைமுறையில் தவறு செய்கின்ற தனது தோழர் களைத் தனிமையில் கடிந்து கொள்ளத் தவறமாட்டார். தான் ஏற்றுக் கொண்ட புரட்சிக் கொள்கைகளைத் தவறாது கடைப்பிடிக்கிற குப்தா, நாடாளுமன்ற விதிகளைச் சற்றும் மீறுகிறவர்கள் யாராயினும் அவர்கள் மீது பாய்வார். தனது கடைசிக் காலத்தில், நாடாளுமன்ற நடவடிக்கைத் தரம் குறைந்து வருவதைப் பற்றித் தனது வெறுப்பை அல்ல, வேதனையை வெளியிட்டு வந்தார்.

தனது வாழ்நாள் முழுவதும் பொதுச் சேவைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அவர், எப்பொழுதுமே தன்னைப் பற்றிப் பேசுவதில்லை. தன்னுடைய பங்களிப் பைப் பற்றி யாரும் பேசுவதையும் அவர் அனுமதிப்ப தில்லை.

ஒரு கட்டத்தில், தானே விதித்துக் கொண்ட எளிமை யான வாழ்விற்கிடையில் தனித்து நின்றார். அவரிடத் தில் மிகவும் போற்றத் தகுந்த விஷயம் யாதெனில், அவர் தன்னை முன்னிறுத்தாமல் பொதுமைப் படுத்திய விதம் தான்.

அவரின் தொடர்ந்த போராட்டங்கள் அல்லது பொதுச் சேவைக்காகத் தன்னை முழுவதுமாக தியாகம்

www.tamilarangam.net



செய்து கொண்டது பற்றி எந்தவித விளம்பரங்களையும் வெறுத்தார்.

''தெளிந்த மனம் கொண்டோர் மேலும் மேலும் உயர உதவும் உந்துவிசையே புகழ்தான். மிகச் சிறந்த மனிதர்களின் கடைசி பலவீனமும் அதை அடைய முயற்சிப்பதுதான்'' என்றார் ஜான் மில்டன்.

இந்திரஜித் குப்தா ஒரு மிகச்சிறந்த மனிதர். புகழ் வடைவதற்காக மிகச் சிறந்த மனிதர்களிடம் காணப் படும் கடைசி பலவீனத்தையும் அவர் வென்று நின்றவர்.

ஆசைகளற்ற அர்ப்பணிப்புள்ள வாழ்விற்கு அவரின் வாழ்க்கை ஒரு வரலாற்றுச் சாட்சி.

தமிழில் : எஸ். சோமு.
நன்றி: 'அவுட் லுக்'

★★★

SEELAN BOOKS ★ NORWAY ★ SIGNATURE

www.tamilarangam.net

# கண்ணியமான கம்யூனிஸ்ட்

சுமித் மித்ரா

தேசத்திற்கு உழைப்பதற்காகத் தன் வாழ்வின் சந்தோஷங்களையெல்லாம் இழந்த தலைமுறையின் கடைசி மனிதர்களில் ஒருவர்தான் இந்திரஜித் குப்தா.

இவர் சென்ற 20.2.2001 அதிகாலையில் கல்கத்தாவில் தனது 82வது வயதில் காலமானார். அவர் கொஞ்ச காலம் புற்று நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்.

போருக்கு முந்தைய இங்கிலாந்தில் படிக்கப் போயிருந்த பலரும் கம்யூனிச தத்துவங்களால் ஈர்க்கப் பட்டவர்கள். அவர்களில் ஒருவராக இந்திரஜித் குப்தா இருந்தார்.

மோகன் குமாரமங்கலம், 60-களிலும் 70-களிலும் இடதுசாரிச் சிந்தனையைத் தூக்கிப் பிடித்த புபேஷ் குப்தா, தன் 23 வருட மேற்கு வங்க முதல்வர் பதவியால் மார்க்ஸிஸ்ட் கட்சிக்கு ஓர் அசைக்க முடியாத இடத்தைப் பிடித்துக் கொடுத்த ஜோதிபாசு போன்றவர்கள் இதில் சிலர்.

இந்திரஜித் குப்தாவும் தன் வழியில் வெற்றி பெற்றார். 1960-ம் ஆண்டில் நடந்த ஒரு இடைத்தேர்தல் மூலம் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1977-80 தவிர சாகும்வரை மக்களவை உறுப்பினராகவே இருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1998-ல் சக்தி வாய்ந்த உள்துறை அமைச்சர் பொறுப்பை ஏற்கும் முதல் கம்யூனிஸ்ட் ஆனார். (அதே உள்துறை அமைச்சகம் தான் சுதந்திரத்திற்குப் பின் மூன்று முறை கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்திருந்தது. குப்தா உட்பட அதன் பெரும்பாலான உறுப்பினர்கள் நெடுங் காலத்திற்கு சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களின் குரல்வளை நெரிக்கப்பட்டது.)

இந்திரஜித் 'சன்னி' குப்தாவின் குடும்பம் பாரம் பரிய மிக்கது. இவரது தாத்தா, தந்தை ஆகியோர் இந்திய சிவில் சர்வீசில் இருந்தவர்கள்.

இவரது பள்ளிப்பருவம் சிம்லாவில் தொடங் கியது. பிறகு டில்லியின் புனித ஸ்டீபன் கல்லூரியிலும், கேம்ப்ரிட்ஜிலுள்ள கிங்ஸ் கல்லூரியிலும் பயின்றார்.

குப்தாவின் குடும்பத்தினர் பிரம்ம சமாஜத்தின் உறுப்பினர்களாக இருந்தவர்கள். மேற்கு வங்கத்தின் புகழ் பெற்ற முதல்வரான பி.சி. ராய் இவர்களின் உறவுக் காரர்.

கேம்ப்ரிட்ஜின் பட்டம் பெற்று இந்தியாவுக்கு வந்தபின், வங்கத்திலிருக்கும் சணல் தொழிற்சாலைகளின் தொழிற்சங்கத் தலைவரானதால் நிறைய ''வர்க்க மாறு தலுக்கு'' உள்ளாக வேண்டியிருந்தது.

உண்மையில் குப்தா, இடதுசாரி உலகத்திற்கு ஆற்றிய சேவையை விட இந்திய அரசியல் பண்பாட்டுக்கு ஆற்றிய சேவை அதிகம். அவரது 37 வருட மக்களவை உறுப்பினர் பதவிக் காலத்தில் இவர் கடைப்பிடித்த கொள்கையை மூன்று வாக்கியத்தில் சொல்லிவிட முடியும். தன் இரங்கல் செய்தியில் அந்த மூன்று வாக்கியங்களை யும் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் பயன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுத்தியிருந்தார். ''காந்திய எளிமை, ஜனநாயகப் பார்வை, மதிப்பீடுகளின் மீது பிடிப்பு'' ஆகியவையே அவை.

அவர் உள்துறை அமைச்சராக இருந்தபோது, பாரதிய ஜனதா கட்சிதான் முக்கிய எதிர்க் கட்சியாக இருந்தது. நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு நாளும் புயல் ஓய்ந்த பிறகு அவர் சொல்லும் வாக்கியம் இதுதான்: ''எதிர்க் கட்சி வரிசையில் இருந்திருந்தால் நானும் இதைத் தான் செய்திருப்பேன்.''

மார்க்ஸிஸ்ட் கட்சியின் இ.எம்.எஸ். நம்பூதிரிப்பாட் மாதிரியோ, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புபேஷ் குப்தா மாதிரியோ இந்திரஜித் குப்தா ஒரு சித்தாந்தவாதி யில்லை எனலாம். ஆனால் கண்ணியமும் ஒழுக்கமும் மிகுந்த வீரர் அவர்.

அவர் இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு, ''எந்த வேலையையும் செய்ய தயாராக இருப்பதாக கட்சிக்குக் கடிதம் எழுதினார். 1948-ல் பி.டி. ரணதிவே தலைமையில் கட்சி, சுதந்திரத்தைக் கேள்விக்குள்ளாக்கிய போது மற்ற படித்த தோழர்களைப் போல் குப்தாவும் நெளிந்தார். ஆனால் கட்சித் தலைமையை அவர் எதிர்க்கவில்லை. பதிலாக கட்சியின் தொழில் நுட்பப்பிரிவு'' - வழங்கிய சூர்யா என்ற மாற்றுப் பெயருடன் தலைமறைவாக கட்சிப் பணிகளை ஆற்றத் தொடங்கினார்.

1964-ல் சீனா விவகாரத்தில் கட்சி இரண்டாகப் பிரிந்தபோது தோழர். எஸ்.ஏ. டாங்கேயின் தலைமையில் தேசியக்கவுன்சிலின் 35 உறுப்பினர்களைக் கொண்ட தாய்ப் பிரிவிலேயே இந்திரஜித் குப்தா இருந்து விட்டார். டாங்கே ஆதரவாளர்களின் முக்கிய தீர்மானத்தை தயாரித்துக் கொடுத்தவரே இவர் தான். டாங்கேயின் காங்கிரஸ் ஆதரவு, குறிப்பாக நெருக்கடி நிலைக்குப் பின், குப்தாவுக்குப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிடிக்கவில்லையென்றாலும் அதைப் பற்றி அவர் கட்சிக் கூட்டங்களைத் தவிர வேறு எங்கும் பேசியதில்லை.

சொந்த வாழ்க்கையிலும் கூட கண்ணியம் மிக்கவராகவே வாழ்ந்தார். தான் வெகு நாட்களாகக் காதலித்த சுரையாவை தன் 62-வது வயதில் திருமணம் செய்து கொண்டார்.

பொது வாழ்வுக்கு வந்த பின் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகார பூர்வ நடத்தை விதிகளை (இதைத்தான் குடியரசுத் தலைவர் காந்திய வழி எனக் குறிப்பிட்டார்.) பின் பற்றத் துவங்கிய அவர் கடைசி வரை அதிலிருந்து விலகவே இல்லை.

வெஸ்டர்ன் கோர்ட்டிலிருக்கும் இரண்டு அறைகள் கொண்ட வீட்டில்தான் வசித்தார். வீட்டிலிருக்கும் போது லுங்கி; பணியிலிருக்கும் போது புஷ்சர்ட், இவையே அவரது உடைகள்.

அமைச்சராகும் வரை நாடாளுமன்றத்துக்கு நடந்து செல்வதுதான் அவரது வழக்கம். நண்பர்கள், உறவினர்கள் தவிர யார் அழைப்பையும் அவர் ஏற்றுக் கொள்வது கிடையாது. மிகவும் நெருக்கமானவர்களின் பார்ட்டியிலும் கூட உணவு சிறிதளவே உண்பார். அதுவும் எளிமைதான்.

இவர் அமைச்சராக இருந்த சமயத்திலும் இவருக்காக அலுவலக கார், விமானம் நிற்கும் இடம் வரை வர அனுமதித்ததில்லை. விமான நிலைய வண்டியில்தான் ஏறிச் செல்வார். பொதுவாழ்வில் தூய்மையும் கண்ணியமும் முக்கியம் என்பதை அவர் வாழ்ந்து காட்டியிருக்கிறார்.

நன்றி : **இந்தியா டுடே - மார்ச் - 7, 2001.**

★★★

www.tamilarangam.net

# மார்க்சீய ஞானப்பழம்

எங்கள் இதய துடிப்பா யிருந்தவன்
இந்திர ஜித்தெனும் இமயத்தை இன்று
இழந்து வாடுகிறோம் மனம்
தளர்ந்து பாடுகிறேனடா காலா

கங்கைநதி என் றெடுத்த
கதிராடும் செவ் வாமைவன்
சிங்க நிகர்வீரம் இவன்
சிந்தை யெலாம் பனிஈரம்

பொங்கிவரும் அறிவு நதியிவன்
போராடும் புரட்சி மதியுமவன்
பூமித் தாயாய் சுழன்று நாளும்
பூகம்ப நடை பயின்றவன்

மார்க்சீய மணம் பரப்பும்
மலர் சோலை தென்றலிவன்
பார்புழ் பாரத விடுதலை
தேர் நடத்தி வந்த கண்ணன்

உதிரி பூக்களை சரந் தொடுத்து
உரிமைப்போர் தொடுத்தவன்
எதிரி களைபகை முடித்தேழை
ஏற்ற ங்காண துடித்தவன்

மத யானைகளை கொட்டம் அடக்கி
நிதம் வாழ்வில் மானிடர் மன
நிம்மதி கண்டிட நெருப்பில் நடந்து
நெடும் புகழ் கொண்டவன்

www.tamilarangam.net



மார்க்சீய ஞான பழம் - ஒளி
மங்காக வைரக் களம்
நீங்காத துயர் சாய்த்து இன்ப
நிழல் விரித்த ஆலமரம்

நாடாளு மன்றத் திலோ
வாடாத செம்ம லராம்
பாடாளு மனிதர் நாளை
நாடாள நாள் பார்த்தவன்

**வேறு**

அடே காலா
ஊரே உறங்கும் வேளையில்
பாரே போற்றும் எங்கள்
ஏழை யின் தோழனை
இறை கொண் டாயோ!
கோழையே! காலா! போடா
செக் கென்று சிவ லிங்கத்தை
நாக்கிய நாயே, காலா
போடா மூடா நிற்காதே
போடா போ போ!

கவிஞர் எஸ்.எம். மருதாசலம்
கோவை.

www.tamilarangam.net

# தோழர் இந்திரஜித் குப்தா மறைவிற்கு சகோதரக் கட்சிகள் அரசுத்தூதர்கள் இரங்கல்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒப்பரிய தலைவர்களின் ஒருவரும், முன்னாள் மத்திய உள்துறை அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தோழர் இந்திரஜித் குப்தா அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளும், தூதரகங்களும் பல்வேறு அரசுகளின் தூதர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு அனுப்பியுள்ள இரங்கல் செய்திகளைக் கீழே தருகிறோம்.

## சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு

தோழர் இந்திரஜித் குப்தா அவர்கள் காலமானார் என்ற செய்தியறிந்து அதிர்ச்சியடைந்தோம். தனது வாழ்க்கையை கம்யூனிச லட்சியங்களுக்கு அர்ப்பணித்ததன் மூலம் தோழர் குப்தா, இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும், முற்போக்கான குறிக்கோள்களுக்கும் குறிப்பிடத்தக்க பங்கை அளித்துள்ளார். சீன மக்களின் பழம்பெரும் நண்பர் என்ற வகையில் சீனாவிற்கும், இந்தியாவிற்குமிடையே நட்புறவை வளர்த்திடச் செயலாற்றினார். அவரது மறைவு குறித்து நாங்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். தோழர் குப்தாவின் குடும்பத்திற்கு எங்களது அனுதாபத்தைத் தெரிவியுங்கள்.

www.tamilarangam.net



## மக்கள் சீனக் குடியரசின் தூதரகம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழு உறுப்பினர் திரு. இந்திரஜித் குப்தா அவர்களின் மறைவைக் கேட்டு அதிர்ச்சியுற்றோம். அவரது மறைவிற்கு எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. குப்தா சீனமக்களின் பழம்பெரும் நண்பர் மட்டுமல்லாது இந்திய கம்யூனிஸ்ட் க்டசியின் மூத்த தலைவர்களில் ஒருவர். அவரது மறைவின் மூலம், நாங்கள் ஒரு நல்ல நண்பரை இழந்தோம். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு நல்ல தலைவரை இழந்து நிற்கிறது. அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆறுதலைத் தெரிவியுங்கள்.

- ஜூ. காஸ்.

★★★

## யுகோஸ்லாவியக் குடியரசின் தூதுவர்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், முன்னாள் மத்திய அமைச்சருமான திரு. இந்திரஜித் குப்தா அவர்களின் மறைவிற்கு யுகோஸ்லாவியக் குடியரசின் தூதரகத்தின் சார்பிலும், எனது சார்பிலும் எங்களது நெஞ்சார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அவரது மரணத்தின் விளைவாக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அர்ப்பண உணர்வோடு பணியாற்றிய ஒரு தலைவரையும், ஒரு தலைசிறந்த நாடாளுமன்ற வாதியையும் இழந்துவிட்டது. நமதிரு நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்திடப் பாடுபட்ட மேன்மை வாய்ந்த நண்பரை நாங்கள் இழந்து விட்டோம். அவரது அறிவாற்றலும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பல்கேரிய தூதரகம்

பல்கேரியாவின் நெடுநாள் நண்பரும், புகழ் வாய்ந்த நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த தொழிற் சங்கத் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான திரு. இந்திரஜித் குப்தாவின் மறைவிற்கு எங்களது இதய பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒரு தொழிற்சங்கத் தலைவராகவும், மத்திய உள் துறை அமைச்சராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றிய திரு. இந்திரஜித் குப்தா, தனது போற்றத் தக்க அரசியல் பணிகளோடு, பல்கேரியாவிற்கும் இந்தியா விற்கும் இடையே பாரம்பரியமான நட்புறவையும் பய னுள்ள ஒத்தழைப்பையும் வசப்படுத்துவதாலும் விரிவு படுத்துவதாலும், மதிப்பிடற்கரிய பங்காற்றியவர். அவரது பங்களிப்பை நாங்கள் பெரிதும் பாராட்டுகிறோம். அவர் என்றும் எங்கள் நினைவில் நிற்பார்.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவியுங்கள்.

- எட்வின் சுகரேவ்

புதுடெல்லியில் உள்ள பல்கேரிய தூதுவர்.

★★★

www.tamilarangam.net



## பங்களாதேஷ் கம்யூனிஸ்ட் கட்சி

இந்தத் துணைக்கண்டத்தினுடைய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்த முன்னணித் தலைவர்களில் ஒருவரான தோழர் இந்திரஜித் குப்தாவின் திடீர் மரணம் பற்றிய செய்தி எங்களை மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்திரஜித் குப்தா எங்களது கட்சியின், எங்கள் நாட்டின் உண்மையான நண்பர். எங்களது நாட்டின் விடுதலைப் போரின் போது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த வகையில் பங்காற்றியவர். அவரது பணிகள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்.

இந்திய மக்களவையின் மிகுந்த போற்றுதற்குரிய உறுப்பினரான இந்திரஜித் குப்தா ஓர் அர்ப்பண உணர்வு கொண்ட சர்வதேசியவாதி. அவரது அரசியல் வாழ்க்கை மிகச்சிறப்பான ஒன்றாக அமைந்திருந்தது. இந்தியாவின் உள்துறை அமைச்சராகச் செயலாற்றி தனது நாட்டிற்காகப் பணியாற்றியவர் அவர்.

துயரமிக்க இந்த வேளையில், அ.வரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், உறுப்பினர்களனைவருக்கும் எங்களது உளப்பூர்வமான ஒருமைப்பாட்டைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தியத் தோழர்கள் வருங்காலத்தில் இந்திரஜித் குப்தாவின் மரபை உறுதியாக முன்னெடுத்துச் செல்வார்கள் என்பதில் நாங்கள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளோம். இந்திரஜித் குப்தாவின் நினைவு என்றும் நிலைத்திருப்பதாக

**மன்சூரல் அசன் கான்** — *தலைவர்*

**முஜாஹிதுல் இஸ்லாம் சலீம்** — *பொதுச் செயலாளர்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கம்யூனிஸ்ட் மையத்தின் சார்பில்

தோழர் இந்திரஜித் குப்தாவின் மறைவிற்கு எங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். துணைக் கண்டத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சுடரொளியை முன்கொண்டு சென்றவர்களில் ஒருவர் தோழர் குப்தா. சோதனைகளும், நிலைமாற்றங்களும் ஏற்பட்ட காலங்களிலும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பதாகையை உயர்த்திப்பிடித்தவர் அவர். மறைந்த அந்தத் தலைவருக்கு மீண்டும் எங்களது ஆழ்ந்த இரங்கலையும், மரியாதையையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- பருன் ராய், ஆநாய்ராய், அலி அக்சத்,
வசேதுல் இஸ்லாம் கார், நுரூர் ரஹ்மான் சலீம்.

★★★

## சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி

இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்த தலைவர் தோழர் இந்திரஜித் குப்தாவின் மறைவுச் செய்தி அறிந்து சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு அதிர்ச்சியடைந்தது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், ஏ.ஐ.டி.யூ.சி.யின் தலைவருமான தோழர் குப்தா தேசவிடுதலைக்கும், சமூக விடுதலைக்கும், மனித குல விடுதலைக்கும் ஆற்றிய பணிகள் சிறப்பானவை. இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்து அவர் ஆற்றிய செயலாக்க மிக்க பணிகள் காரணமாக உலகம் முழுவதிலும் உள்ள முற்போக்கு

www.tamilarangam.net



சக்திகளின் நேசத்தையும், பாராட்டுக்களையும் பெற்றது. இந்திய மக்களவையில் நீண்ட நாட்கள் அவர் ஆற்றிய பணி எல்லோராலும் முன் மாதிரியாகக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். அவரது உணர்ச்சிமிக்க, சொல்திற மிக்க, ஊடுருவும் தன்மை கொண்ட பேச்சுக்கள் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் கௌரவத்தை உயர்த்தின.

இரண்டு அமைச்சரவைகளில் நாட்டின் உள்துறை அமைச்சராக அவர் ஆற்றிய பணி, அவர் ஒரு சிறந்த நிர் வாகி என்பதை நிரூபித்தது. இந்திய உழைக்கும் மக்களின் நலன்காக்கும் நோக்கம் தனது வாழ்நாள் முழுவதும் பொறுப்போடும், அர்ப்பணம் மற்றும் தியாக உணர் வோடும் வாழ்ந்தவர் அவர்.

போராட்டங்களும், தியாகங்களும் நிறைந்த புகழார்ந்த இந்திய வரலாற்றில் ஒரு மக்கள் தலைவர் என்ற முறையில் அழியாத இடத்தைப் பெற்றவர் அவர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சிக்கும் உள்ள உறவை வலுப்படுத்துவதில் அவர் ஆற்றிய பங்கு புகழ்வாய்ந்ததும், மதிக்கத்தக்கதுமாகும்.

எங்களது தொழிற்சங்கத் தலைவர் எல். டபிள்யூ. பண்டிதா அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவு விழா வில் கலந்து கொள்ள 1988 ஆம் ஆண்டில் அவர் இலங்கைக்கு வருகை புரிந்தது இன்னமும் எங்கள் நினை வில் பசுமையாக இருக்கிறது.

தேசவிடுதலை, சுதந்திரம், அமைதி, சமூகநீதி ஆகிய வற்றிற்காக அவர் ஆற்றிய பணிகளை நினைவு கூர்ந்து சிறிலங்கா, கம்யூனிஸ்ட் கட்சி செம்பதாகை தாழ்த்தி தனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

www.tamilarangam.net



எங்களது ஆழ்ந்த அனுதாபத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு உறுப்பினர்களுக்கும், தோழர் இந்திரஜித்தின் அன்புத் துணைவியார் சுரையா அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

டியூ குணசேகர
பொதுச் செயலாளர்

★★★

## மொராக்கோ தூரகம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும், முன்னாள் மத்திய உள்துறை அமைச்சரும், நாடாளுமன்றத்தின் நீண்டநாள் உறுப்பினருமான மேதகு இந்திரஜித் குப்தா அவர்களின் மறைவு எனக்கு ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியது.

இந்தத் துயரமிக்க வேளையில் எனது இரங்கலை ஏற்றுக் கொள்ளுங்கள்.

திரு. இந்திரஜித்குப்தா, விடுதலை மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றிற்காகப் பாடுபட்டவர். 1997ஆம் ஆண்டு நவம்பரில் அவர் வாழ்ந்து வந்த வெஸ்டர்ன் கோர்ட் குடியிருப்பில் அவரைச் சந்தித்தது இன்றும் எமது நினைவில் நிற்கிறது.

இந்த இழப்பைத் தாங்கிக் கொள்ளும் மன உறுதியை இறைவன் உங்களுக்கு அளிக்கட்டும். அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

மொகமத் லூ. ஃபா.
மொராக்கோ தூதுவர்

www.tamilarangam.net

# கேம்பிரிட்ஜிலிருந்து சணல் தொழிலாளரின் சேரிக்கு

*(டைம்ஸ் ஆப் இந்தியா - பிப்ரவரி 21 - புதுடெல்லி பதிப்பு)*

கம்யூனிஸ்டு தலைவரும், முன்னாள் உள்துறை அமைச்சருமான இந்திரஜித் குப்தா, சேரியின் உயிர்த்துடிப் புள்ள ஒரு மேட்டுக்குடி மனிதர்.

காலனி அதிகார வர்க்கத்தின் உயர்மட்டங்களில் இருந்தவர்களின் குடும்பத்தில் அவர் பிறந்தார். செயிண்ட் ஸ்டீபன் கல்லூரியில் படித்துவிட்டு, இங்கிலாந்தின் புகழ் பெற்ற கேம்பிரிட்ஜீக்குச் சென்றார். அங்கு பயின்று, அடிமை இந்தியாவின் உயர் அதிகாரியாகத் திரும்புவது தான் நோக்கம்.

ஆனால் அங்கு சென்றபின், திசைமாறினர். கேம்பிரிட்ஜீம், லண்டனும் 1930களில் வெறிகொண்ட முற்போக்குச் சிந்தனைகளுக்கு ஆட்பட்டிருந்தன. கம்யூனிஸ்ட் ஆசிரியர்களான ரஜனி பாமிதத், பிராட்லி ஆகியோர், இந்திய மாணவர்களிடையே கம்யூனிஸ்ட் தத்துவத்தை எடுத்துரைத்து ஈர்த்தனர்.

காலனி அதிகார எதிர்ப்பினாலும், சோவியத் எழுச்சியாலும் கிளர்ச்சிபெற்ற இந்திரஜித்குப்தா, அவரைப் போலவே ஈர்க்கப்பட்டிருந்த மோகன் குமாரமங்கலம், பொரோஸ்காந்தி, ஜோதிபாசு, புபேஷ் குப்தா, என்.கே.கிருஷ்ணன், நிகில் சக்ரவர்த்தி ஆகியோரை நோக்கிச் சாய்ந்தார்.

www.tamilarangam.net



கேம்பிரிட்ஜின் கிங்கஸ் கல்லூரியிலிருந்து, வங்கத்தின் ஹூக்ளி நதிக்கரையோரம் இருந்த சணல் தொழிலாளர்களின் சேரிகளில் பணியாற்ற, 1940களில் ஒரு தொழிற்சங்கவாதியாக அவர் வந்து சேர்ந்தார்.

இறுதிவரை தனது நோக்கங்களுக்காவே வாழ்ந்தார். 'எந்தச் சலுகையும் பெற்றிராதவர்களின் உரிமைகளுக்கான போராட்டத்துக்கு அடையாளச் சின்னமாக அவர் விளங்கினார் '' என்கிறார் வி.பி.சிங். சாதாரண சட்டை, பேண்ட்டோடு எப்போதும் உலாவிய குப்தா, அவரது தூய்மைக்கும், நல்ல ருசிப்பிற்கும் பெயர் போனவர்.

பொதுவாக முரட்டுத்தனமானவர்களாகவே அறியப் பட்டிருந்த கம்யூனிஸ்டுகளின் மத்தியில் அவர் மிகவும் மென்மையான நடத்தை உடையவராக இருந்தார்.

எதற்கும் உடனடியாக பதிலடி தருவதில் அவர் சளைத்ததில்லை. அதேசமயம் அவரது மாசற்ற நடத்தையாலும், நட்புணர்வோடு மற்றவர்களிடம் கொண்ட பழக்கத்தாலும் ஒரு சுத்த வீரனாக வாழ்நாள் முழுதும் ஜொலித்தார். எதிர்காலத்தில் இளம் அரசியல்வாதிகளால் பின்பற்ற வேண்டிய மாதிரி அரசியல்வாதியாகத் திகழ்ந்தார்.

தனக்கு வழங்கப்பட வேண்டிய மாளிகை எந்தத் தெருவில் இருக்க வேண்டும், எவ்வளவு பெரியதாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்து, அதற்காக மாறவும் தயாராக இருக்கும் அரசியல்வாதிகள் நிறைந்த காலம் இது. இதில் எண்ணிப்பார்க்க முடியாத எளிமையோடு இந்திரஜித் இருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாடாளுமன்ற உறுப்பினரானபோது தனக்கு அளிக்கப்பட்டிருந்த, வெஸ்டர்ன் கோர்ட்டில் உள்ள இறுக்கமான இரண்டு அறை வீட்டில் இறுதிவரை வசித்தார். உள்துறை அமைச்சரானபோது, பெரியமாளிகை தர அரசு முன்வந்தபோதும், பழைய வீட்டிலிருந்து மாற அவர் மறுத்துவிட்டார்.

ஏராளமான எளிமை அவரிடம் கொட்டிக்கிடந்தாலும், எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளும் சாமியார் அல்ல அவர். அவருக்கே உரிய கோபம், சிலசமயம் மேலாதிக்கத்தின் எல்லையைக்கூட சில சமயம் தொட்டு விடக்கூடிய அளவில் வெளிப்படும்.

எந்தப் பிரச்சினையிலாவது, அவர்து கருத்தை அறிவதற்காக அவரை அணுகும் பத்திரிகையாளர்களிடம், அவர் நடந்துகொள்ளும் முறை அலாதியானது. சிக்கவைக்கும் நோக்கத்தோடு கேள்வியைப் போட்டால், அவரிடமிருந்து முரட்டுத்தனமான எதிர்க்கேள்விதான் பதிலாக வரும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது, மிதுனாப்பூரில் உள்ள ஒரு சாதரண லாட்ஜில் தங்கிக்கொண்டு பிரச்சாரம் செய்துகொண்டிருந்தார். வராந்தாவில் ஒரு மர நாற்காலியில் அமர்ந்துகொண்டு, அடுத்த கூட்டத்துக்கு செல்வது பற்றிப் பேசிக்கொண்டு இருந்தர்.

தொகுதிக்கு அவர் நீண்டகாலமாக வரவில்லை என்பதையும், தொகுதியைப் 'பராமரிக்க'' வில்லை என்றும் குற்றச்சாட்டுகள் இருப்பதாக தோழர்கள் அவரிடம் கூறினார்கள். அவரும் கவலைப்பட்டார்.

மாலையில் பொதுக்கூட்டத்தில் அவர் பேசத் தொடங்கினார். 'நான் அடிக்கடி இங்கு வரவில்லை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பது உண்மை. நான் நினைத்த அளவுக்குக் கூட என்னால் வரமுடியாமல் போனது. டெல்லியில் அவ்வளவு வேலை இருக்கிறது'' என்று பட்டவர்த்தனமாகத் தெரிவித்தார்.

தனது எதிரிகளால் என்ன குற்றச்சாட்டு தன்மீது வைக்கப்பட்டதோ, அதை அப்படியே அதிலும் தேர்தலுக்கு முதல்நாள் ஏற்றுக்கொள்ள எந்த வேட்பாளருக்கும் துணிச்சல் வராது.

இந்திரஜித் அதை ஏற்றார். அதுதான் அவருக்கும் இன்றைய ஏனைய அரசியல்வாதிகளுக்கும் இருக்கும் வேறுபாடு.

தமிழில்: டி.எம். மூர்த்தி

NORWAY SEELAN BOOKS SIGNATURE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு முதிர்ந்த குரல் முற்றுப்பெற்றது

★ *பாராளுமன்ற ஜனநாயகத்துக்காக உறுதியாக நின்ற முதல் கம்யூனிஸ்ட் உள்துறை அமைச்சர்.*

வேகமாக மறைந்து வருகிற அரசியல் பண்புகளான எளிமை, அர்ப்பணிப்பு, மேதைமை அனைத்தும் ஒருங்கமைந்த அரசியல்வாதி இந்திரஜித்குப்தா. ஒப்பிட்டுப் பார்த்து யாரையும் சொல்லமுடியாத அளவுக்கு தனித்தன்மையான நாடாளுமன்றவாதி அவர்.

அவர் பல ஆண்டுகளாக எதிர்க்கட்சி வரிசையிலிருந்தும், சில மாதங்கள் ஆளும்கட்சியாக இருந்தும் எப்போது எழுந்து பேசினாலும், அவைக்குள்ளே அமானுஷ்ய அமைதிவந்துவிடும். எந்தப் பிரதமராக இருந்தாலும், விவாதத்துக்கு பதிலளிக்கும்போது இந்திரஜித் வைத்த கருத்துக்களைத் தொடாமல் போனதேயில்லை.

11 தடவை நாடாளுமன்றத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட குப்தா, 1990களில் அக்கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்தார். மிகச்சிறந்த நாடாளுமன்றவாதிக்கான பரிசு 1992ல் வழங்கப்பட்டபோது, அவ்விருதைப் பெறும் முதல் தகுதியுடையவராக அவர் தேர்வு செய்யப்பட்டார்.

நாடாளுமன்றம் என்ற அமைப்பை அவர் மிகவும் மதித்தார். கம்யூனிஸ்ட் இயக்கம் மிகச்சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்தியாவுக்குத் தந்துள்ளது. நாடாளுமன்றத்திற்குள் வாதிட்டு, அந்த அமைப்புக்கே

www.tamilarangam.net



வலிமை சேர்த்த ஏ.கே.கோபாலன், எஸ்.எம்.பானர்ஜி, எஸ்.ஏ.டாங்கே, ஹிரேன் முகர்ஜி, புபேஷ் குப்தா, ஜோதிர் மாய்பாசு ஆகியோரின் வரிசையைச் சேர்ந்தவர் இந்திரஜித்.

குப்தா உள்துறை அமைச்சராக இருந்தபோது, அசாமில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டதாகக் கூறி, அவரைக் கடுமையாகத் தாக்கிப்பேசினார் காங்கிரஸின் சந்தோஷ் மோகன்தேவ். இடைவேளையில் இந்திரஜித் நாடாளுமன்றத்தின் மையமண்டபத்தில் அமர்ந்துகொண்டிருந்தபோது, அந்தப்பக்கமாக தேவ் வந்தார். உடனே அவ்வரை அழைத்த குப்தா 'சந்தோஷ், இன்று நீங்கள் மிக அருமையாகப் பேசினீர்கள். நான் எதிர்க்கட்சியாக இருந்திருந்தால் இதையேதான் நான் பேசியிருப்பேன்'' என்று கூறிப் பாராட்டினார்.

நரசிம்மாராவ் ஆட்சியின்போது, தொலைத் தொடர்பு ஊழலை முன்வைத்து நாடாளுமன்ற பிஜேபி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கலக்கின. இரண்டு அவைகளையும் நடத்தவே விடவில்லை. அப்போதைய ஒரு மாலை நேரத்தில் மையமண்டபத்தின் வாசலுக்கு அருகே ஒரு சோபாவில் இந்திரஜித் அமர்ந்திருந்தார். சோர்வுற்றவராக, தீவிர சிந்தனையில் இருந்ததை நான் பார்த்தேன்.

நாடாளுன்றமே தடைபட்டு நிற்பதை அவரால் ஏற்கமுடியவில்லை. நாடாளுமன்ற வாதத்தின் தரம் குறைந்து வருவதிலும், கிரிமினல்கள் கூட உறுப்பினராகி, பேசுவதற்கு முன்பு உரிய தயாரிப்பு இல்லாமலேயே அவைகளுக்கு வந்துவிடுவதையும் எண்ணி அவர் சோர்வுறவே செய்தார்.

'நாம், நாடாளுமன்றம் என்ற அமைப்பையே பாழடித்துக் கொண்டு இருக்கிறோம்'' என்றார். அன்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டுமல்ல; இந்த குளிர்காலக் கூட்டத் தொடரில், அயோத்தி பிரச்சினைக்காக நாடாளுமன்ற நடவடிக்கைகளைத் தடுத்த தற்காக காங்கிரஸ் மீதும் இதே கருத்தைத் தெரிவித்தார்.

இவ்வளவு ஆண்டுகள் உறுப்பினராக இருந்தும், தனது இருக்கையை விட்டு இந்திரஜித் வெளியே வந்ததோ, கூவிச் சப்தமிட்டதோ இல்லை. ஆனால் பேசும்போதெல் லாம், அவரது ஒவ்வொரு வார்த்தையையும் எதிர்த்தரப்பை நிர்மூலப்படுத்தி, மக்களின் பிரச்சினைகளை வெளிப் படுத்தவே பயன்படுத்தினார். அதன் பலத்தையும் அவர் நன்கு உணர்ந்திருந்தார்.

ஒரு விஷயத்தின்போது, பா.ஜ.க. தலைவர் வி.கே.மல்ஹோத்ரா பாஜக ஆளும் மாநிலங்களில் வகுப்பு வாதக் கலவரங்கள் குறைந்துவிட்டன என்று பெருமை யடித்துக்கொண்டார்.

'ஆமாம். வகுப்புவாதக் கலவரக்காரர்களே ஆட்சி யில் இருந்தால், இயல்பாகவே கலவரங்கள் குறையத் தான் செய்யும்'' என்று திருப்பியடித்தார் இந்திரஜித். அவரது வாயிலிருந்து யாரும் சுலபத்தில் தப்பிவிட முடியாது.

தனது 13 நாள் ஆட்சியின் இறுதியில் வாஜ்பாயின் மீது கொண்டுவந்த நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது 1996, மே 28ம் தேதியன்று இந்திரஜித் தனது புகழ்பெற்ற வாதத்தை வைத்தார். ஜார்ஜ் பெர்ணான்டஸ் மீது ஒரு குட்டு வைக்க முடிவுசெய்துவிட்டார். அதற்கு மகாத்மா காந்தியை துணைக்கு அழைத்துக் கொண்டார்.

'இந்தியாவில் உள்ள சோஷலிஸ்ட்டுகள், சோஷ லிஸத்தின் அரிச்சுவடியையே அறியவில்லை. அவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வகுப்புவாதிகளின் ஆக்டோபஸின் பிடியில் சிக்கியிருப்ப தால், அவர்களுக்கு இந்திய சோஷலிஸம் பற்றிப் புரிந்து கொள்ளமுடிவதில்லை என்று காந்தி சொன்னார். அப் போது இதற்காக கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் அவரோடு நிறைய சண்டை போட்டோம். ஆனால் அப்போது தவறு செய்துவிட்டோம் என்று இப்போதுதான் புரிகிறது'' என்றார் இந்திரஜித்.

அவர் தனது இடதுசாரி நண்பர்களையும் விட்டு வைக்கவில்லை. ஒருதடவை திரிபுராவில் சட்டம் ஒழுங்கு சீர்கேடுபற்றி விவாதம் வந்தது. எல்லோரும் காங்கிரஸைப் ஒரு பிடி பிடித்தார்கள். இந்திரஜித்தின் முறை வந்தது; தனது அருகிலிருந்த சோம்நாத் சாட்டர்ஜியைக் காட்டி 'இவர்களும் சமமாகக் குற்றம் செய்தவர்களே'' என்று தயங்காமல் கூறினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாள ராக இந்திரஜித் இருந்தபோது, சமூக ஆதிக்கம், ஜாதி ஆகியவையும் வர்க்கப் போராட்டத்தின் ஒருபகுதியாக அக்கட்சி அங்கீகரித்தது.

இடஒதுக்கீடு என்பதை ரொம்பவும் முன்ன தாகவே சிபிஐ ஏற்றிருந்தது. ஆனால் மண்டல் கமிஷன் பரிந்துரைகள் வந்தபின்னர் ஹைதராபாத் காங்கிரஸில் சமூகநீதிக்கு தனி அழுத்தம் தரப்பட்டது.

உள்துறை அமைச்சரசான பின்னும் தனது இரண்டு அறை வீட்டில் இருந்து வெளியேற மறுத்தார். ஆனாலும் சிவப்பு விளக்குக்கார், பாதுகாப்பு வாகன அணிவரிசை ஆகியவற்றை தவிர்க்கமுடியவில்லை. அவற்றைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெரும் பாரமாகக் கருதினார். அமைச்சராக இருந்தபோதும் எம்.பி.ஹாஸ்டல் டைனிங்ஹாலில் வழக்கம்போல உணவு உண்ணுவதை அவர் நிறுத்தவில்லை.

ஒரு தொழிற்சங்கத்தலைவராக பொதுவாழ்வில் புகுந்த அவர் இறுதிவரை மாறாமல் இருந்தார். 20 லட்சம் மத்திய அரசு ஊழியர்களுக்கு 5வது ஊதியக்குழு பரிந்துரையை அமுல்நடத்தும் வகையில் ரூ.10,000 கோடியை ஊதிய உயர்வாக வழங்கியதற்கு அவர்கள் நன்றி பாராட்டியே ஆக வேண்டும்.

எளிதாகப் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீதான அக்கறை அவருக்கு அதிகம் இருந்தது. அதனால் காஷ்மீர், வடகிழக்குஎல்லை மாநிலங்களின் மக்கள் பிரச்சினைகளை மிகுந்த நிதானத்துடன் அணுகிவந்தார்.

'போலீஸ் அராஜகத்தை' எதிர்த்து டெல்லி, ஜந்தர் மந்தர் முன்பு தர்ணா அமர்ந்ததற்காக யாசின் மாலிக் கைதுசெய்யப்பட்டார். எழுத்தாளர் குல்தீப் நய்யார், உள்துறை அமைச்சர் குப்தாவைப் பார்த்து விஷயத்தைச் சொன்னார். கைதுபற்றி அதுவரை அறியாத குப்தா உடனே மாலிக்கை விடுதலை செய்யச் சொன்னார். சில வழக்குகளில் விசாரணை செய்யுமாறு கோருவதற்கு ஒரு குடிமகனுக்கு உரிமைஉண்டு; இதில் என்ன தவறு கண்டீர்கள் என அதிகாரிகளைக் கடிந்து கொண்டார்.

குளிர்காலக் கூட்டத்தொடரில் கலந்துகொண்டபோது, அவரது சக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் 'நான் வெளிநடப்பு செய்யவேண்டிய நேரம் இது'' என்று தன்னையே கிண்டலடித்துக் கொண்டிருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாடாளுமன்றத்தின் சட்டதுணைக்குழு, இந்திரஜித் தலைமையில் கூட இருப்பதாக பிப்ரவரி 20ம் தேதி நாடாளுமன்ற அறிவிப்புப்பலகையில் அறிவிப்பு ஒட்டப் பட்டிருந்தது.

'ஆனால் அந்த 'நாடாளுமன்றப் பாதுகாவலரால்', தனக்கு அளிக்கப்பட்ட கடைசிவேலையை நிறைவேற்றித் தர முடியவில்லை.

இந்தியன் எக்ஸ்பிரஸ் 21.2. 2001
புதுதில்லிப் பதிப்பு வெளியிட்ட அஞ்சலி
தமிழில் டி.எம். மூர்த்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்துறைக்கு உள்ளே ஓட்ட முடியாமல்...

1996 ஆம் ஆண்டு ஜுலை 15 ம் தேதி காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோபத்தின் உச்சியில் இருந்தனர். காங்கிரஸ் ஆதரவில் இருந்த அன்றைய எச்.டி.தேவ கௌடா தெரிவித்த கருத்து அதற்கு காரணம். 'லக்குபாய் பாடக் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள பி.வி.நரசிம்ம ராவை, தனது தலைவராக காங்கிரஸ் கொண்டிருக்கும் வரை மீண்டும் ஆளும் பொறுப்பை எட்டவே இயலாது'' என்பதுதான் அக்கருத்து.

கேள்விநேரம் முடிந்தவுடன், காங்கிரஸ் தலைமைக் கொறடா சந்தோஷ் மோகன்தேவ் எழுந்து உள்துறை அமைச்சர் மீது குற்றம் சுமத்தினார். 'எங்களது உட்கட்சி விவகாரங்களுக்குள் தலையிடுவது மட்டுமில்லாமல், நீதிமன்றத்தின் முன் நிலுவையில் இருக்கும் வழக்கிலும் செல்வாக்கைச் செலுத்தி திசைமாற்றமுயலுகிறார்'' என காட்டமாகத் தாக்கினார்

அந்த உள்துறைஅமைச்சர் இந்திரஜித் குப்தாவே தான். காங்கிரஸ் உறுப்பினர்கள் அடுத்துச் செய்ய வேண்டியதை எதிர்பார்த்து மருகிக்கொண்டிருக்கிறார்கள். இந்திரஜித் எழுந்து, ஆளும் கட்சித்தரப்பில் முதல் மேசைக்கு வந்தார். எழுந்து நின்று, நாடாளுமன்றத்தின் அதுவரை பயன்படுத்தியிராத சொற்களைக் கூறினார்; '' I am sorry'' (நான் வருந்துகிறேன்.)

www.tamilarangam.net



இந்த மூன்று வார்த்தைகளும் அந்த மனிதரின் உன்னத நாகரிகத்தை வெளிப்படுத்தின. அத்தோடு இந்திய அரசாங்க இயந்திரத்தின் வன்மையை வலிந்து திணிக்கும் உரமான உள்துறைக்கு, ஓர் ஆயுள்கால கம்யூனிஸ்ட் தலைமையேற்றதன் முரண்பாட்டையும் காட்டின.

அரசாங்க அமைப்பை முழு மூச்சோடு எதிர்த்துவந்த குப்தா, சர்தார் படேலும், பண்டிட் கோவிந்த் வல்லப பந்தும் அமர்ந்த அதே நாற்காலியில் அமர வேண்டி வந்தது. ஆனால் அமைச்சகத்தின் அதிகார வர்க்கப் பரிவாரங்கள் தன்னை அச்சுறுத்துவதற்கு குப்தா ஒரு வழியிலும் விடவில்லை. இந்த மகத்தான மனிதருக்கு, உள்துறை அமைச்சகத்தின் அதிகாரவர்க்கக்கூட்டம் ஒத்துழைப்புத் தரவில்லை என்பது வெட்கத்துக்குரியது.

புதுடெல்லியின் அரசியல்வாதிகளின் கூட்டத்தில், ஒழுக்கத்திலும் அறிவுக்கூர்மையிலும் அப்பழுக்குச் சொல்லமுடியாத ஒரு மனிதனாக குப்தா இருந்தார். இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய வலுவான அமைச்சர், ஒரு சாதாரண வீட்டில் வாழக்கூடாது என்று அதிகாரிகள் தாஜா செய்துபார்த்தும் அவர் அசைந்து கொடுக்கவில்லை.

1997 நவம்பரில் ஜெயின் கமிஷன் அறிக்கையின் இடைக்கால அறிக்கை தங்கள் கைக்கு கிடைத்துவிட்டதாகக்கூறி, காங்கிரஸ்காரர்கள் நாடாளுமன்றத்தில் புயல் கிளப்பினர். இந்திரஜித்தின் நேர்மையையும், நாகரிகத்தையும் அவர்கள் தவறாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கைக்கு அடிப்படையான சான்றுகளின் தன்மையை அரசுபரிசீலித்து முடிவெடுக்கலாம் என்று குப்தா ஆலோசனை கூறினார்.

www.tamilarangam.net



இந்த சரியான ஆலோசனையைப் பிடித்துக் கொண்ட ஜிதேந்திரப்பிரசாத், அர்ஜீன்சிங், கே.கருணாகரன் உள்ளிட்ட காங்கிரஸ்காரர்கள் குப்தாமீது வசைமாரி பொழிந்தனர். இதன் தொடர்ச்சியாக குஜ்ரால் அரசை காங்கிரஸ் கவிழ்த்தது, இன்னொரு தேர்தலைக் கொண்டு வந்து, பிஜேபி அரசியல் அரங்கில் உயர்வதற்கு வழி செய்தது. அதே காங்கிரஸ் இன்று ஜெயின் கமிஷன் தீர்ப்பைப்பற்றி சுத்தமாக மறந்து தூக்கிப்போட்டுவிட்டது வேறுவிஷயம்.

1998 மார்ச்சில் உள்துறை அமைச்சகத்தின் தான் ஆடிய விநோதமான இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தபோது, ஒருவழியாக விடுதலை பெற்றதாக குப்தா உணர்ந்தார் என்றே சொல்லலாம். அவர் தனது வழக்கமான எதிர்க் கட்சி மேசைக்கு வந்ததில் மகிழ்ச்சியடைந்தார்.

எந்த அரசின் மீதும், அவர் எவ்வளவு கடுமையான தாக்குதலைத் தொடுத்தபோதும் - அவரது வாதத்தின் கண்ணியத்தால், பேச்சின் நயத்தக்கத நாகரிகத்தால், பண்பு மாறாத நடத்தையால் அவரது எதிரிகளும் அவரை நோக்கி ஆகர்ஷிக்கப்பட்டார்கள்.

இந்தப்பண்புதான் இப்போது நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தொலைந்து போய்க்கொண்டு இருக்கிறது.

தி. ஹிந்து - 21-2-2001

www.tamilarangam.net

# நாடாளுமன்ற அற்புத நாவலர்

நாடாளுமன்ற ஜனநாயக முறையை ஏற்றுக் கொண்டு தேசிய நீரோட்டத்தில் அங்கமாக கம்யூனிஸ்டு கள் மமாறிய பிறகு, நாடாளுமன்றத்தில் இடதுசாரிப் பார்வையுடன் பிரச்சினைகளை அணுகி அற்புதமான நாடாளுமன்ற நாவலர்களாகப் பிரகாசித்த தலைவர்கள் சிலரில் எடுப்பானவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவ ரான இந்திரஜித் குப்தா.

தமிழ்நாட்டு பி. ராமமூர்த்தி, வங்கத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி, பூபேஷ் குப்தா, சோமநாத் சாட்டர்ஜி போன்ற முன்னணித் தலைவர்களின் வரிசை யில் இடம் பெற்றவர் இந்திரஜித் குப்தா.

ராமர் காவியத்துப் பாத்திரமான இந்திரஜித் விற்போ ரில் மாவீரன். அதைப் போலவே இவர் நாடாளுமன்ற விவாதக் கலையில் தேர்ச்சி பெற்றவர். இந்த ஓர் அம்சத் தைத் தவிர, ராவணனின் மகனான அந்த இந்திரஜித் தோடு எதிலும் இவரை ஒப்பிட முடியாது.

போரில் யுத்த தர்மத்தை ஒதுக்கி வைத்து விட்டு, மாயாஜால யுத்தங்களைப் புரிவதில் அவன் வல்லவன். அவனுக்கு வெற்றி மட்டுமே முக்கியம். அதற்காக எதை யும் செய்யக் கூடியவன். ஆனால் பொதுவுடமைத் தலைவ ரான இந்திரஜித் குப்தாவோ, நாடாளுமன்றத்தில் சொற் போர்களில் பங்கு கொண்ட போதெல்லாம் வரன் முறை களை - அரசியல் நாகரிகத்தை எப்பொழுதுமே மீறிய தில்லை. அறிவார்ந்த வாதமும் கூர்மையான வார்த்தைப் பிரயோகமும் அவருடைய உரைகளின் தனி அழகு.

www.tamilarangam.net



எப்பிரச்சினையாக இருந்தாலும் அதன் ஆழ, அகலத்தை உணர்ந்து யதார்த்த உணர்வுடன், செயற்கைப் பூச்சு கலவாமல் அழுத்தமான தர்க்க வாதத்தை உரையின் ஊடே எழுப்புவது அவருடைய தனிப்பாணி. இந்தக் காரணத்தினாலேயே அவருடைய ஆழ்மான உரைகள் நாடாளுமன்றத்தில் தனி மரியாதையுடன் செவி மடுக்கப் பட்டன.

இன்னொரு வகையில், மற்ற கம்யூனிஸ்ட் தலைவர்களுக்குக் கிடைத்திராத வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.

1996 முதல் 1998 வரையில் மத்தியில் ஆட்சி புரிந்த ஐக்கிய முன்னணி அமைச்சரவைகள் இரண்டி லும் - பிரதமருக்கு அடுத்த முக்கியத்துவம் உடைய உள் துறை அமைச்சகத்தின் பொறுப்பை குப்தா வகித்தார்.

சர்தார் படேல், பண்டித கோவிந்த வல்லப பந்த் போன்ற பெரும் தலைவர்கள் வகித்த அதே பொறுப்பில் இவர் அமர்ந்திருந்த போதிலும் பழைய எளிமையைக் கைவிடவில்லை.

காளான் ரக அரசியல்வாதிகள் பாதுகாப்புக் காவல் படையுடன் பவனி வருவதைத் தனி அந்தஸ்தாக நினைத்து பூரித்து வரும் காலத்தில், பந்தா இல்லாத உள்துறை அமைச்சராக நடந்து காட்டிய பெருமை குப்தாவுக்கு உண்டு. டில்லியில் அதே பழைய இரண்டு அறைகளில் நிம்மதி யாக வாழ்ந்து காட்டினார்.

அனுபவக் கனிவுடன் கொள்கை உறுதியையும் தரம் தாழாத பொது - வாழ்வுடன் கண்ணியத்தையும் காத்து வந்த அபூர்வ தலைவர் குப்தா மறைந்து விட்டார்.

www.tamilarangam.net



இதன் மூலம் நாடாளுமன்றம் தனது அற்புதமான வைர ஆபரணத்தை இழந்து விட்டது.

விளம்பர வெளிச்சத்துடன் நடைபெற்று வரும் நவீன கபட நாடக அரசியலில் குப்தா போன்ற வைர மேறிய தலைவர்கள் இனித் தோன்ற முடியுமா என்பதே சந்தேகத்திற்கு உரியதுதான். அவருடைய அருமைக்கு இதை விடச்சான்று தேவையில்லை.

தினமணி - தலையங்கம்
நாள் : 22.2.2001.

★★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உயரிய சமூக அர்ப்பணிப்பு

- சுகுமார் முரளீதரன்

மக்களவையில் நீண்ட காலம் உறுப்பினராக பணியாற்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் உள்துறை அமைச்சருமான இந்திரஜித் குப்தா தனது 82-வது வயதில் பிப்ரவரி 20ஆம் தேதி அன்ற காலமானார். குளிர்கால கூட்டத்தொடர் முழுவதும் நாடாளுமன்றம் அவரை பார்க்க முடியாமல் போய்விட்டது. மக்களவையில் ''மக்களவையின் தந்தை'' என்று அழைக்கப்பட்ட அவர் அனைத்திந்திய மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தில் புற்றுநோய் தீவிர சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். சில மாதங்களுக்கு முன்பு தான் அவருக்கு புற்றுநோய் இருப்பது தெரியவந்தது.

1992-ஆம் ஆண்டு அயோத்தியில் நடந்த வன்முறை அழிவுவேலை சம்பந்தமாக அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றப்பத்திரிக்கை குறித்து எதிர் கட்சியினர் காரசாரமாக விவாதித்த அந்த நேரத்தில் கோட்பாடு ரீதியாக நிதானத்தோடு தனது வாதத்தை முன்வைக்க இந்திரஜித் குப்தா அவையில் இல்லை. நீண்டகாலமாக பாராளுமன்ற ஜனநாயக அமைப்போடு இணைந்து வாழ்ந்து வந்த அவர் கோல்கட்டாவில் தனது இறுதி மூச்சிற்காக இறுதி போராட்டத்தை நடத்தி கொண்டு இருந்தார். இருப்பினும் அவர் மறைந்த செய்தி டெல்லியை அடைந்ததும் பாராளுமன்றத்தின் அவரது சக உறுப்பினர்கள் இந்த நஷ்டம் மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்தனர்.

www.tamilarangam.net



40 ஆண்டு காலமாக மக்களவை நடவடிக்கைகளுக்கு கௌரவத்தையும் பெருமையையும் தேடி தந்த மனிதருக்கு இறுதி அஞ்சலி செலுத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடினர். அவரது பெருமையை பற்றி பேச வார்த்தைகள் போதுமானதாக இல்லை என்பது தெளிவாகவே தெரிந்தது. அவரது தலைமுறையை சேர்ந்த அரசியல் வாதிகளுக்கு மிக சிறந்த முன் மாதிரியாக இருந்தார் என்று இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் எஸ். ஜெயபால் ரெட்டி வேதனை நிறைந்த குரலில் சுட்டிக்காட்டினார். மக்களவையின் முன் வரிசையில் இருந்த மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் சோமநாத் சாட்டர்ஜி தனது சக தோழர்களுடன் அடிக்கடி இணைந்தே செயல்பட்டவர். தான் பேசுகின்றபோது இந்திரஜித் குப்தாவின் 'இளைய சகோதரர்கள் பல ஆண்டுகள் பணியாற்றியது தனக்கு பெருமை அளிப்பதாக குறிப்பிட்டார். 1996-98 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய முன்னணி அரசில் படோடாபமற்ற அமைச்சராக இருந்த போதிலும் உண்மையாகவும் உணர்ச்சிபூர்வமாகவும் பணியாற்றி இருக்கின்றார். அரசியல் கருத்துகளில் வேறுபாடுகள் இருந்த போதிலும், குப்தாவின் சித்தாந்த உறுதிப்பாடு எப்பொழுதும் அவர்பால் தமக்கு மரியாதை ஏற்படுத்தியது குறித்து பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய் தனது பேச்சில் குறிப்பிட்டார். நெருக்கடி காலங்களில் பொதுக் கருத்தை உருவாக்குவதற்கு என்றைக்குமே பாடுபட்டு வந்தார் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். ஒவ்வொரு முக்கிய வாதங்களின் போதும் மிக உயர்ந்த அம்சங்களை கொண்ட அவரது உரைகளை மிகப்பெரிய புத்தகமாக பதிப்பிக்கலாம் என்று விவசாய அமைச்சர் நித்திஷ் குமார் யோசனை தெரிவித்தார். நீண்ட கால அனுபவம் பெற்றிருந்த அவரின் படத்தை பொருத்தமான இடத்தில் வைத்து நாடாளுமன்றத்துக்கு ஆற்றிய

www.tamilarangam.net



அவரது பணிகளை நினைவு கூர வேண்டும் என்று மற்றவர்கள் தெரிவித்தனர். உழைக்கின்ற வர்க்கத்தின் உயரிய லட்சியத்தை தழுவி நிற்க வந்த இடதுசாரி அரசியல்வாதிகளின் தலைமுறையில் ஒரு கௌரவமான இடத்தை இந்திரஜித் குப்தா வகித்தார்.

சர்வதேச முதலாளித்துவ நெருக்கடி ஏற்பட்ட ஆண்டுகளில் பிரிட்டிஷ் பல்கலைக்கழகம் தந்த அறிவு ஜீவிகளில் இவரும் ஒருவர். அந்த காலங்களில் அவரது கருத்துகள் புடம்போட்டு எடுக்கப்பட்டன இந்திரஜித்குப்தா , ஜோதிபாசு, பூபேஷ்குப்தா, மோகன் குமார மங்கலம், பார்வதி குமாரமங்கலம், என்.கே. கிருஷ்ணன் ரேணு சக்கரவர்த்தி, நிக்கில் சக்கரவர்த்தி ஆகியோர் தேசிய விடுதலைக்கும் ஐரோப்பாவில் பாசிஸத்திற்கு எதிராகவும் போராடிய இந்திய மாணவர் குழுவை சார்ந்தவர்கள்.

இந்தியாவிற்கு திரும்பியவுடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் அரசியல் பணிக்காக தன்னை ஈடுபடுத்தி கொண்டார். அந்த காலகட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்ட விரோத அமைப்பாக பிரகடனப்படுத்தப்பட்டு இருந்தது. அதில் இருந்தோர் ஏகாதிபத்திய அரசின் கொடுமைகளை சந்திக்க வேண்டி இருந்தது. வங்கத்தில் நிலம் படைத்த ஒரு செல்வந்தர் குடும்பத்தில் இருந்து வந்த அவர் சமூக பணிக்காக தன்னை அர்ப்பணித்திருந்தது ஒரு தீவிரமான நடவடிக்கை ஆகும். மேலும் அவரது குடும்பத்தில் இருந்தவர்கள் அரசு பணியில் இருந்தவர்கள், அந்த காலத்தில் நிலவிய பதட்டத்தில், கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஒரு தலைமறைவு தகவல் காரராக அவர் பணியாற்றினார். அவரது பேச்சுக்களிலும் வாதங்களிலும், ஆழமான இலக்கியம் இருந்திருந்த போதிலும் அவர் சில புத்தகங்களையும் எழுதி வெளி யிட்டுள்ளார். சணல் தொழிலில் மூலதனமும் உழைப்பும் என்ற புத்தகத்தை சுதந்திரத்திற்கு பின்னர் எழுதி வெளியிட்டுள்ளார். அன்றி

www.tamilarangam.net



லிருந்து இன்றைக்கும் மதிப்பு மிக்க புத்தகமாக அது திகழ்கின்றது.

மேலும் தேசிய பாதுகாப்பும் சுயசார்பும் என்ற புத்தகமும் அவரது படைப்பாகும்.

1960ஆம் ஆண்டில் நடந்த இடை தேர்தலின் மூலம் மக்களவைக்கு முதன் முதலாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இடதுசாரி கட்சிகளில் நீண்ட காலம் செயல்பட்ட கவிஞர் ஜாவித் அக்தர், இந்திரஜித் குப்தாவைப் பற்றி குறிப்பிடுகையில், கவரக்கூடிய பள்ளி சிறுவனாக அவர் மக்களவைக்கு வந்ததையும் வாதத்தில் ஜவஹர்லால் நேருவையும் தனது இளமை துடிப்பால் கவர்ந்து இழுத்ததையும் நினைவூட்டினார்.

1992இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொது செயலாளர் பொறுப்பேற்றுக் கொண்டார்.

தமிழில் : திருவருட்செல்வன்
ஃப்ரண்ட் லைன்
மார்ச் 16 - 2001.

www.tamilarangam.net

# இந்திரஜித் குப்தா – வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| தந்தையின் பெயர் | : | திரு சதீஷ் சந்திர குப்தா |
| பிறந்த தேதி | : | 1919, மார்ச் 18 |
| பிறந்த இடம் | : | கல்கத்தா (மேற்கு வங்கம்) |
| குடும்பத் தகுதி | : | திருமணமானவர் |
| மனைவியின் பெயர் | : | திருமதி சுரைய்யா |
| குழந்தைகள் | : | ஒரு மகன், மூன்று புதல்விகள் |
| கல்வித் தகுதி | : | பி.ஏ. (ஹான்ர்ஸ்), பயின்றது டில்லி செயின்ட் ஸ்டீபன்ஸன் கல்லூரி, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், பிரிட்டன் |
| தொழில் | : | அரசியல் ஊழியர் |
| நிரந்தர விலாசம் | : | 1, டோவர் சாலை, கல்கத்தா - 700 019 (மேற்கு வங்கம்)<br>தொலை பேசி : 3327821 |

வகித்த பதவிகள் :

| | | |
|---|---|---|
| *1960* | : | மக்கள் சபைக்கு (2வது) தேர்வு |
| *1962* | | மக்கள் சபைக்கு (3வது) தேர்வு |
| *1967* | | மக்கள் சபைக்கு (4வது) தேர்வு (3வது தடவையாக) |
| *1971* | | மக்கள் சபைக்கு (5வது) தேர்வு தேர்வு (4வது தடவையாக) |
| *1980* | | மக்கள் சபைக்கு (7வது) தேர்வு (5வது தடவையாக) |
| *1984* | | மக்கள் சபைக்கு (8வது) தேர்வு (6வது தடவையாக) |

www.tamilarangam.net



| | |
|---|---|
| *1985-89* | பொதுப்பணிகள் கமிட்டி உறுப்பினர் |
| *1986-87* | மனுக்கள் கமிட்டியின் உறுப்பினர் |
| *1989* | மக்கள் சபைக்கு (9வது) தேர்வு - 7வது தடவையாக |
| *1989 டிசம்பர்* | அலுவல் ஆலோசனைக் கமிட்டி உறுப்பினர் |
| *1990* | நூலகக் கமிட்டி உறுப்பினர் உள்துறை அமைச்சக ஆலோசனைக் கமிட்டி உறுப்பினர் |
| *1990-க்குப் பிறகு* | இந்திய கம்யூ பொதுச் செயலாளர் |
| *1990 ஜனவரி* | விதிகள் கமிட்டி உறுப்பினர் |
| *1990 ஜனவரி* | 1987ம் வருடத்திய பஞ்சாப் மாநில சட்டமியற்றல் (அதிகாரப்பகிர்வு) சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைக் கமிட்டி உறுப்பினர் |
| *1990 அக்டோபர்* | மக்கள் சபை செயலக விதிகள் - 1955 மறு ஆய்வுக் கமிட்டி உறுப்பினர் |
| *1991* | மக்கள் சபைக்கு (பத்தாவது தேர்வு) (8 வது தடவையாக) பாதுகாப்பு அமைச்சக ஆலோசனைக் கமிட்டி உறுப்பினர் |
| *1996* | மக்களவைக்குத் தேர்வு 9வது முறை |
| *1998* | மக்களவைக்குத் தேர்வு 10வது முறை |
| *1999* | மக்களவைக்குத் தேர்வு 11வது முறை |
| *1996-1998* | தேவகவுடா மற்றும் குஜரால் தலைமையில் அமைந்த ஐக்கிய முன்னணி அரசின் மந்திரி சபையில் உள்துறை அமைச்சர், தேர்தல் சீர்திருத்தக் கமிட்டியின் தலைவராகப் பணியாற்றியவர். |

www.tamilarangam.net



| | | |
|---|---|---|
| வெளியிடப்பட்ட நூல்கள் | : | சணல் தொழிலில் மூலதனமும், தொழிலாளிகளும், 'தேசப் பாதுகாப்பில் சுயசார்பு' |
| சிறப்பு ஆர்வம் | : | பொருளாதார விவகாரங்கள், அயல் துறைக் கொள்கை, பாதுகாப்பு |
| விருப்பமான பொழுது போக்கு | : | படிப்பது, விளையாட்டுகள், நடை உலா |
| விஜயம் செய்த நாடுகள் | : | பல நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார். நமீபியாவுக்குப் பிரதம மந்திரியின் தூதுக்குழு உறுப்பினர் 1990 மார்ச். |
| இதர தகவல்கள் | : | இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கெடுத்து கொண்டவர். இங்கிலாந்தில் மாணவனாக இருந்த போது ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தில் ஈர்க்கப்பட்டார். வெளிநாட்டிலிருந்து தாயகம் திரும்பியது தலைமறைவு வாழ்க்கை. ஏஐடியுசியின் பொதுச் செயலாளர். 1980-90 உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் (டபிள்யுஎப்டியு) துணைத் தலைவர். 1982 லிருந்து பல தொழிற்சங்கங்களின் தலைவர். இந்தியத் தொழில் நுட்பக் கழகக் கவுன்சில் உறுப்பினர் (1990 ஏப்ரல் 19லிருந்து). தலைசிறந்த நாடாளுமன்ற வாதி என்ற விருது. |

www.tamilarangam.net



1992 செப்டம்பர் 23ல் நாட்டின் சிறந்த நாடாளுமன்ற வாதி என்று முதலாவது ஜி.பி. பந்த் நினைவு விருது வழங்கப்பட்டது. நாடாளுமன்ற மண்டபத்தில் நடை பெற்ற ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் பிரதம மந்திரி பி.வி. நரசிம்மராவ் அவர்களால் இந்த விருது வழங்கப்பட்டது. இந்த விருது வழங்கும் போது, நாட்டின் நாடாளுமன்ற ஜனநாயக முறையின் வளர்ச்சிக்கு இந்திரஜித் குப்தா வின் பங்களிப்பைப் பிரதம மந்திரி மிகவும் பாராட்டிப் பேசினார். மக்கள் சபையின் சபாநாயகர் இந்த நிழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். இந்தியாவின் துணை ஜனாதிபதி இந்த நிகழ்ச்சியில் பாராட்டுரை வழங்கினார். இந்த நிகழ்ச்சியின் போது நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அனைத்து மாநிலங் களின் சட்டப் பேரவைகளின் சபாநாயகர்களும் வந்திருந் தனர்.

இந்த முக்கிய நிகழ்ச்சிக்கு இந்தியத் தகவல் சாதனங்கள் பிரதான முக்கியத்துவம் அளித்து செய்தி வெளியிட்டன.

இடைக்கால சபாநாயகர். 22.5.1996 அன்று, (11வது மக்கள் சபை) மக்களவையின் முதலாவது அமர்விற்கு இடைக்கால சபாநாயகராக இந்தியக் குடியரசுத் தலைவர், அவரை நியமித்தார்.

10வது மக்களவையின் முதலாவது கூட்டத்திலும் இடைக்கால சபாநாயகராக இருந்தார்.

★★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இடதுசாரிக் கட்சிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் சக்தி எது?

***இந்திரஜித் குப்தாவின் உளம் திறந்த பேட்டி***

நாடாளுமன்றத்தின் நீண்டகால உறுப்பினர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஜாம்பவான் இந்திரஜித் குப்தா தனது 82-வது வயதில் கல்கத்தா வில் காலமானார். கள்ளம் கபடில்லாமல், ஒளிவுமறை வில்லாமல் பேசும் சுபாவமுள்ள குப்தா, ஐக்கிய முன்னணி அரசில் உள்துறை அமைச்சரான பிறகும் கூட, புதுடெல்லி வெஸ்டர்ன் கோர்ட்டில் உள்ள தனது எளிமையான வீட்டை விட்டு வர மறுத்துவிட்டார். புற்றுநோய் அவரைத் தளர்வடையச் செய்வதற்கு முன்னால், அந்த வீட்டிலிருந்து தான் தனது உள்ளத்தைத் திறந்து காட்டும் கடைசிப் பேட்டிகளில் ஒன்றுக்கு அனுமதி கொடுத்தார். ஆர். சங்கருக்கும் பரஞ்ஜய் குஹா தக்கூராவிற்கும் அவர் கொடுத்த, இதுவரை வெளிவராத பேட்டியிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள்.

★ ***இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக மூன்று ஆண்டுகளில் மூன்று பொதுத் தேர்தல்களைச் சந்தித் திருக்கிறோம். அந்த அளவிற்கு நமது ஆட்சி முறை அதிகமாகச் சீர்கேடடைந்துள்ளதா?***

பொதுவாகவே மக்கள் குழம்பிப் போயிருக்கிறார் கள். இந்த மாதிரி விஷயங்கள் அவர்களுக்குப் பழக்க மில்லை. அவர்கள் இன்னும் கட்சிகளைக் கணிக்க முயற்

www.tamilarangam.net



சிக்கிறார்கள். மிகச் சரியாகக் கணிக்க முடியவில்லை போலும். ஆனால் கட்சிகளெல்லாம் உடைந்து கொண்டிருக்கின்றன. எங்கெங்கோ போய்க் கொண்டிருக்கின்றன. ஆகவே மக்கள் இயல்பாகவே மிகவும் குழம்பிப் போயிருக்கிறார்கள். பாரதிய ஜனதாக் கட்சியின் தலைமையிலோ அல்லது காங்கிரஸ் (ஐ)யின் தலைமையிலோ அமையும் கூட்டணி ஆட்சியைத் தவிர்க்க முடியாதென்பதுதான் எனது கருத்து. அப்படி அமையும்போது, இந்த இரண்டு கட்சிகளில் ஒன்றுதான் பெரும்பான்மை கூட்டணி ஆட்சியின் தலைமையை ஏற்கும். எந்தக் கூட்டணியானாலும் அது ஓரளவு நிலைத்தன்மையை அடைய அந்தக் கூட்டணியோ, அதில் அங்கம் வகிப்பவர்களோ என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வதில்லை. ஒரு கூட்டணி அரசு நிலைத்து நீடிப்பதற்கு எந்தவகையிலும் வெளியிலிருந்து தரப்படும் ஆதரவை நம்பியிருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து.

**★ ஐக்கிய முன்னணி அரசை எடுத்துக்கொண்டால், காங்கிரஸ் (ஐ) ஒரு பக்கமும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஃபார்வர்டு பிளாக், மற்றும் புரட்சி சோசலிஸ்ட் கட்சி ஆகியவை மற்றொரு புறமும் இருந்து வெளியிலிருந்து ஆதரவளித்துக் கொண்டிருந்தன. எந்தக் கட்டத்திலும் சி.பி.எம்., ஃபார்வர்டுபிளாக், ஆர்.எஸ்.பி. ஆகிய கட்சிகள் ஆட்சியைக் கவிழ்த்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டதில்லை.**

ஆனால் நாம் ஏன் காங்கிரஸின் ஆதரவை ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தோம்? அதைப்பற்றி நமக்கு எந்தவித மாயையும் இல்லை. ஆனால் இந்த ஐக்கிய முன்னணி அரசு மதச் சார்பற்றதாக இருக்கின்றவரை, மதவெறிச் சக்திகளை எதிர்த்துப் போராடுகிறவரை நாங்கள் இந்த அரசுக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எவ்விதத் தொந்தரவும் கொடுக்கமாட்டோம், கவிழ்க்கவும் மாட்டோம் என்று அக்கட்சியின் தலைவர் நரசிம்மராவ் நாடாளுமன்றத்திலேயே கூறியதோடு, நாங்கள் கொடுத்த வாக்கை மீறமாட்டோம் என்று அவையிலேயே உறுதியும் கொடுத்தார்.

சரி. இவர்களெல்லாம் எப்படிப்பட்டவர்கள் என்று தெரிந்தும் கூட இவர்களின் வாக்குறுதிகளை நம்பலாமா என்று நீங்கள் கேட்கலாம். எப்படியோ, அப்போது இருந்த சூழ்நிலையில் எல்லோரும் சரி என்று சொல்லிவிட்டார்கள். உண்மையிலேயே, அவ்வப்போது முரண்பட்ட கருத்துக்களைச் சொல்லிக்கொண்டே இருந்தவன் நான் ஒருவன் மட்டும்தான். அதனால் அவர்கள் எல்லோரும் என்மீது கோபத்துடனேயே இருந்தார்கள்.

★ **ஆமாம். காங்கிரஸ் (ஐ) மீது காலணிகள் வீசப்படும் என்று நீங்கள் சொன்னீர்களே!**

.... அவர்கள் ஆதரவை விலக்கிக் கொண்டால் ஆம். அப்படி நான் சொன்னது தவறுதான். ஆனால் கடைசியில் அவர்கள் ஆதரவை விலக்கிக் கொண்டு விட்டார்களே!

★ **நீங்கள் சற்று பின்னோக்கிப் பார்த்தால், அந்தச் சமயத்தில் நரநநசிம்மராவ் காங்கிரஸ் (ஐ) தலைவராக இல்லை. சீதாராம் கேசரி வந்துவிட்டார். முதலில் தேவே கௌடாவை நீக்கி இந்தர் குஜ்ராலை பதவி ஏற்கச் செய்ததற்கும் பிறகு சீதாராம் கேசரி காங்கிரசின் ஆதரவை விலக்கிக்கொண்டதற்கும் என்ன காரணமாயிருக்கும்?**

தேவே கௌடாவை நீக்கியதற்கு சீதாராம் கேசரி முழுப் பொறுப்பல்ல. அவரும் ஒரு காரணம். அவ்வளவுதான்.

www.tamilarangam.net



ஐக்கிய முன்னணிக்குள்ளேயே தேவே கௌடாவை மாற்றம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தது.

**★ தேவேகௌடா அரசு நீடிக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டபிறகுதான் ஐக்கிய முன்னணியில் அப்படிப் பட்ட எண்ணம் வந்தது என்று கொள்ளலாமா? அல்லது சீதாராம் கேசரி, ஆதரவை விலக்கிக் கொண்டதற்கு முன்னாலேயே ஏற்பட்டதா?**

பல விஷயங்கள் நடந்து கொண்டிருந்தன. கௌடா ஒரு தன்னகங்காரம் கொண்ட மனிதராகக் காணப்பட்டார். நான் அவரது உள்துறை அமைச்சர். தொலையட்டும். அவர் என்னோடு பேச மறுத்தார். அவர் என்னோடு பேசியதே இல்லை. என்னைக் கலந்தாலோசித்ததே இல்லை. இதை எல்லாம் நான் வெளிப்படையாகச் சொல்ல முடியாது. அப்போதும் கூடச் சொல்ல முடியவில்லை. நான் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. அவர் நடந்து கொண்ட விதம் பலருக்குப் பிடிக்கவில்லை. அவர் தன்னலக் கும்பல் சேர்க்கிறவராகச் செயல்பட்டார். ஆனால் குஜ்ரால் அப்படியில்லை. ஏதோ, அவரவர் தனிப்பட்ட குணங்களும் குணக்குறைகளும் வேறு விஷயம்.

**★ எதிர்பார்த்த மரியாதையையும் அங்கிகாரத் தையும் ஐக்கிய முன்னணி அரசு தங்களுக்குத் தரவில்லை என்று காங்கிரஸ் (ஐ) ஆழமாக நினைத்தது: என்ன இருந் தாலும் ஐக்கிய முன்னணி அரசின் வாழ்வே காங்கிரஸ் (ஐ)யைச் சார்ந்து தானே இருந்தது.**

ஆமாம். மேலும் சில சலுகைகளைப் பெறுவதற்கு, இந்த ஆதரவை ஒரு கருவியாக அவர்கள் நினைத்தார்கள். அது என்ன? அவர்களும் இந்த அரசில் சேரவேண்டும் என்று நினைத்தார்களா? நாங்களும் பங்கேற்கிற அரசைத்தான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாங்கள் ஆதரிப்போம் என்று அவர்கள் ஏன் சொல்லவில்லை? அப்படி அவர்கள் சொல்லவேயில்லை. அப்படி அவர்கள் சொல்லியிருந்தால்.....

**★ ஆனால் அவர்களில் பலர் தங்களுக்குள்ளேயே அப்படிப் பட்ட எண்ணத்தைத்தான் வளர்த்துக் கொண்டிருந் தார்கள்.**

அவர்கள் அமைச்சர்களாக வேண்டுமென்று விரும்பி னார்கள். வேறொன்றுமில்லை. மீண்டும் அமைச்சர்களாக வேண்டும் என்பதைத் தவிர, இந்த காங்கிரஸ்காரர்களுக்கு வாழ்க்கையில் வேறு என்ன குறிக்கோள் இருக்கிறது?

**★ தாங்களும் அரசில் சேர விரும்புவதாக அவர்கள் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தால், ஐக்கிய முன்னணியின் பதில் என்னவாக இருந்திருக்கும்?**

முன்னணிக்குள்ளேயே பலத்த கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டிருக்கும். சிலபேர், ஒருவேளை அவர்களை அரசில் சேர்த்துக்கொள்வதற்கு ஆதரவாக இருந்திருப்பார்கள்.

**★ காங்கிரஸ் (ஐ)க்கு ஜெயின் கமிஷன் அறிக்கை என்கிற நொண்டிச் சாக்கு தேவைப்பட்டிருக்கிறது - அப்படித் தான் எல்லோரும் நினைக்கிறார்கள்.**

அதை அவர்கள் படித்ததேயில்லை (சிரிக்கிறார்). அவர்களின் ஆலோசகரும் அதைப்படிக்கவில்லை. நான் இதை நிரூபிக்கமுடியும்.

**★ தி.மு.க. அமைச்சர்களை நீக்க வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எல்.டி,டி.இ.யுடன் கூடிக் குலாவிக் கொண்டிருந்தனர் என்பதுதான் தி.மு.க. மீதுள்ள குற்றச்சாட்டு. எல்.டி.டி.இ. யினர்தான் எங்கள் தலைவரைக் கொன்றவர்கள் என்று காங்கிரஸ் கூறுகிறது. ஆகவே அப்படிப்பட்டவர்கள் பங் கேற்கும் அரசை நாங்கள் எப்படி ஆதரிக்க முடியும் என்றனர். அதுதான் அவர்களின் சாக்கு. ஆனால் அந்த அறிக்கையை அவர்கள் படிக்கவில்லை. ஆகவே தி.மு.க.வை வெளி யேற்ற நாங்கள் மறுத்துவிட்டோம். இப்பொழுது தி.மு.க. எங்கேயிருக்கிறது பாருங்கள். இந்த மாதிரி ஆட்களை எப்படி நம்புவது? தி.மு.க.வோ, அ.இ.அ.தி.மு.க.வோ, அவர்களை மொத்தமாகக் கூண்டோடு அழிப்பதாக இருந் தாலும் கூட அவர்கள் ஒரே அணியில் இருக்க ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இது கூட்டணி அரசியலுக்கு மட்டு மல்ல, அரசியல் நியதிகள், அரசியல் கொள்கைகள், கோட் பாடுகள் ஆகியவை சம்பந்தப்பட்ட நிலைபாடும் ஆகும். அவர்க்ள் எங்கேபோய்க் கொண்டிருக்கிறார்கள்? எங்கே போயிருந்தார்கள்?

**★ கோட்பாடுகள் மொத்தமும் சீரழிந்து போன தற்கு இடதுசாரிகளும் ஓரளவு காரணம் என்ற குற்றச் சாட்டிற்கு அவர்கள் என்ன சமாதானம் கூற முடியும்? ஒரு சராசரி மனிதனின் பார்வையில், இடது சாரிகள் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக இருப்பதாகப்படுகிறது. ஒரு கட்டத்தில் நீங்கள் ஜனசங்கத்துடன் இருந்தீர்கள். இன்னொரு சமயம் காங்கிரசோடும் மற்றொரு சமயம் ஜனதா தளத்தோடும் கூட்டுச் சேருகிறீர்கள்.**

நீங்கள் சொல்வது சரிதான். இடதுசாரிகள் முன்னிலைப் படுத்துவதும் இதுவரை காப்பாற்றி வந்திருப்பதுமான எங்களுக்கு மிகவும் சாதகமான அம்சம் என்னவென்றால் நாங்கள் ஊழலற்றவர்கள் என்பதுதான். நாங்கள் சில சமயங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களில் ஊழல்கறை படிந்தவர்களோடு கூடிக் குலாவியிருந் தாலும், நாங்கள் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகவில்லை. இப்போது வெளியாகியுள்ள எந்தப் பெரிய ஊழல், முறை கேடுகள் எதிலும் சி.பி.ஐ., சி.பி.எம். ஆகிய கட்சிகள் எவ்விதத்திலும் சம்பந்தப்படவில்லை. இந்த விஷயத்தில் பிரபலமாகக் கருதப்படுகிற பிஹார் லல்லு, தமிழ்நாட்டு ஜெயலலிதா....

**★ அவர்கள் உங்கள் பக்கம்தான் இருக்கிறார்கள்.**

அவர்கள் எங்கள் பக்கமில்லை. ஆனால் நாங்கள்தான் அவர்கள் பக்கம் இருக்க முயற்சிக்கிறோம். ஆகவே இந்தக் கேள்வி கேட்கப்படுகிறது. இதற்கு எப்படியும் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். அவர்களின் ஊழலில் பங்கு பெறுவதற்காகக் கண்டிப்பாக நாங்கள் அவர்களோடு கைகோர்க்கவில்லை. அவர்கள் என்ன நினைத்துக் கொண் டாலும் சரி, இதை மிகத் தெளிவாகச் சொல்லிவிட வேண்டி யிருக்கிறது. பாரதிய ஜனதா தலைமையில் உள்ள கூட்டணி அரசை எதிர்ப்பது என்கிற எங்களின் கொள்கையை வெளிப்படையாகவே அறிவித்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இதில் ஆங்காங்கே தலைநீட்டுகிற லேசான சந்தர்ப்பவாத நெளிவு சுளிவுகளை முற்றிலுமாக இல்லாமல் தவிர்த்து விட முடியாது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஏனென்றால் இந்தியாவின் ஒட்டுமொத்த அரசியலில், இடதுசாரிகளாகிய நாங்கள் ஒரு பலவீனமான சக்தி.

இடதுசாரிகள் இப்போதிருக்கிற நிலையில், கண்டிப் பாக ஆட்சிக்கு வரப்போவதில்லை. அப்படி வருவதற்கான அறிகுறிகள் ஏதுமில்லை. நாங்கள் தொடர்ந்து எதிரணியின் ஒரு பகுதியாகவே இருப்போம். அறிவித்திருக்கிற குறிக்

www.tamilarangam.net



கோளை அடைய வேண்டுமென்றால், பா.ஜ.க.விற்கு எதிரான வாக்குகள் கூடிய அளவு சிதறாமல் பார்த்துக் கொள்ளு மளவில் நடைமுறைத் தந்திரங்களை வகுத்துக் கொள்ள வேண்டும். பா.ஜ.க. இன்னும் பலமான சக்தியாக உருவாகாத மாநிலங்கள் தவிர மற்றெல்லா மாநிலங்களிலும் இந்த நடைமுறைத் தந்திரம் கையாளப்பட வேண்டும். பா.ஜ.க. பலவீனமான மாநிலங்களில் காங்கிரசுடனான மோதலை நாம் தொடர்வோம்.

**★ நீண்டகால லட்சியங்களை விட, குறுகிய கால திட்டங்களுக்கு இடதுசாரிகள் அதிக முக்கியத்துவம் கொடுப்பதால்தான் அவர்கள் வளரவில்லை என்றும், அவர்கள் ஏற்கனவே பலமாக இருக்கிற பகுதிகளிலேயே சுருங்கி விட்டார்களென்றும் சிலர் கூறுகிறார்கள். பா.ஜ.க.வை லல்லு தோற்கடிக்க முடியும் என்று நினைப் பதால், பீகாரில் இடது சாரிகளாகிய நீங்கள் அவரின் வாலாகி விட்டீர்கள். உத்திரப் பிரதேசத்தில் முலயம் தமிழ்நாட்டில் அப்போது தி.மு.க. இப்போது அ.இ. அ.தி.மு.க. நாட்டின் மிகப் பல பகுதிகளில் பா.ஜ.க. சிறு சக்தியாக இருந்தபோதிலும் அது எடுத்தது போன்று, இடதுசாரிகள் தங்களை ஆட்சிக்கு அடுத்த மாற்றாக அறிவித்து முனைப்பான முயற்சிகளை எடுத்துத் தங்களை முன்னிறுத்தவில்லை.....**

அது அவ்வளவு எளிதல்ல. நிறைய சிக்கலான விஷ யங்கள் இருக்கின்றன. அதில் மோசமான ஒன்று சாதிப் பிரச்சினை. இடதுசாரிக் கட்சிகள் சாதி அரசியலில் ஈடுபட முடியாது. அப்படிச் செய்திருந்தால் இப்போது இருப்பதைக் காட்டிலும் மிக வலிமையான, மிகப் பெரிய கட்சியாக இருந்திருப்போம். குறிப்பாக வட இந்திய மாநிலங்களில்,

www.tamilarangam.net



ஏதாவது ஒன்றிரண்டு சாதிகளோடு இணைத்துக் கொண் டால்.... பகுஜன் சமாஜ் கட்சியைப் பாருங்கள். சில ஆண்டு களுக்கு முன்னால் பி.எஸ்.பி.யைப் பற்றி யாரும் கேள்விப் பட்டதில்லை. இந்த நாட்டின் மிகப்பெரிய மாநிலமான உத்திரப்பிரதேசத்தில் அக்கட்சி இரண்டு முறை முதலமைச்சர் பொறுப்பை வகித்திருக்கிறது. தன்னை தலித்துக்களோடு இணைத்துக் கொண்டு, தலித்துக்கள் ஆட்சியில் இருந்தால் மட்டுமே இந்த நாட்டில் ஏழை எளிய மக்களின் பிரச்சினை கள் தீர்க்கப்பட முடியும் என்று கூறிக் கொண்டு, மற்ற மக்களின் மீது மிகக் காட்டமான நச்சுத் தன்மை வாய்ந்த தாக்குதலைத் தொடுத்துப் பிரச்சாரம் செய்ததால் மட்டுமே அந்தப் பெண்மணி (மாயாவதி) இரண்டு முறை முதலமைச் சராக வரமுடிந்தது.

சாதியத்தில் சிக்கிய சமுதாயம், கசப்பான சாதிச் சண்டைகள், இவைதான் இடதுசாரிகளை வளரவிடாமல் தடுத்து பின்னுக்கிழுத்து வைத்திருக்கிற பெரும் பிரச்சினை கள். ஆரம்பத்திலிருந்தே நாங்கள் சாதிப் பிரச்சினையைப் பற்றிக் கவலைப்படவில்லை. பழங்காலத்திலும் கம்யூ னிஸ்ட்டுகள் இதைபற்றிக் கவலைப்படவில்லை. நாங்க ளெல்லாம் வர்க்கவாதிகள். ஒரு வர்க்கம் மற்றொரு வர்க் கத்தைச் சுரண்டுகிறது என்பது சரி. ஆனால் ஒரு சாதி மற்றொரு சாதியைச் சுரண்டுகிறது என்பது எங்கள் உள்ளங் களில் ஒரு பெரிய பிரச்சினையாகவே படவில்லை. ஆனால் இந்து சமுதாயத்தில் இதை (சாதி முறைகள்) நான் வர்க்க பேதத்தைவிட வலுவான விஷயமாகக் கருதுகிறேன். பெரிய தொழில் மையங்களில் உழைக்கும் வர்க்கம் இருக்கிறது. அங்கெல்லாம் கம்யூனிஸ்ட்டுகளாகிய நாங்கள்தான் தொழி லாளர்கள் மத்தியில், குறிப்பாக தொழிற்சங்க அளவில் வலுவான சக்தியாக இருப்போம். பெரிய வேலை நிறுத்தங்கள் நடைபெறும். நாங்கள்தான் அந்த வேலை நிறுத்தங்களை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்னின்று நடத்துவோம். ஆனால் தேர்தல் என்று வந்து விட்டால், ஊதிய உயர்வு போனஸ் ஆகியவற்றிற்காக செங்கொடியைத் தோளில் சுமந்து போராடிய அதே தொழிலாளர்கள், தங்கள் சொந்த சாதியைப் பார்க்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

இந்த நாட்டில் கம்யூனிஸ்ட்டுகளோ, மார்க்ஸிஸ்ட்டுகளோ, இந்த நிகழ்வு பற்றி சரியான ஆய்வு மேற்கொள்ளவில்லை அல்லது போதுமான கவனம் செலுத்தவில்லையென்றே நான் நினைக்கிறேன். ஒரே நாளில் தொடங்கப்பட்ட நிகழ்வல்ல இது. இது ஓராயிரம் ஆண்டாக இருந்து வருவது. கற்றறிந்த ஒவ்வொருவரும், இந்தச் சமுதாயத்தின் ஒவ்வொரு பிரமுகரும் நாங்களெல்லாம் சாதிக்கு அப்பாற்பட்டவர்கள் என்று சொல்லிக் கொண்டு அலைகிறார்கள். இது அப்பட்டமான பொய். ஆம், இவர்கள் கொச்சையான சாதிப் பிரச்சினைகளில் ஈடுபடவில்லைதான். ஆனால், ஒரு தலித்தைத் தன்னுடன் சமமாக அமர்ந்து ஒன்றாகச் சாப்பிட அனுமதிப்பார்களா? மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். இந்த விஷயங்கள், இந்த மனுஸ்மிருதி, சதுர்வர்ணம் எல்லாம் நம் உள்ளங்களில் மிக ஆழமாகப் பதிந்து விட்டவை. இவற்றைப் போக்க ஓராயிரம் ஆண்டுகள் ஆகும்.

**★ நாட்டின் சில பகுதிகளில் சாதி அமைப்பு பெருமளவில் உடைந்திருக்கிறதே. அதுபோல இடதுசாரிகள் இதுவிஷயத்தில் ஏதாவது செய்ய முடியாதா?**

கேரளாவில் சாதிப் பிரச்சினைகள் இல்லையா? இந்தி பேசும் மாநிலங்களில் உக்கிரமாக இருப்பது போல் அவ்வளவு கடுமையாக இங்கு இல்லாமலிருக்கலாம். நான் அப்படியெல்லாம் தளராத நம்பிக்கை உடையவன் அல்ல. எனக்கு நம்பிக்கையே கிடையாது. இத்தகைய பிரச்சினை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களுக்கு எளிய தீர்வுகள் என்னிடம் இல்லை. அதனால்தான் எனக்கு இந்த நாடாளுமன்றத்தின் மீது சலிப்பு ஏற்பட்டு விட்டது. நான் மீண்டும் நாடாளுமன்றத்திற்கு வர விரும்ப வில்லை. நான் இனிமேல் தேர்தலில் போட்டியிடவே விரும்பவில்லை. அங்கு நடைபெறுகிற நிகழ்வுகளால் நான் ஊக்கம் பெறவேயில்லை.

**★ ஆனால் நீங்கள்தான் மிக நீண்ட காலமாக நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள்?**

சரி. அது நம்மை எங்கு கொண்டு வந்து நிறுத்தி யிருக்கிறது என்று என்னை நானே கேட்டுக் கொள்வேன். நீங்கள்தான் அவையின் மிக மூத்த உறுப்பினர் ஆகவே நாங்கள் உங்களை மதிக்கிறோம் என்று ஒவ்வொருவரும் அவ்வப் பொழுது சொல்லுவார்கள். அதற்குப் பிறகு சபையில் கத்து வார்கள். கூச்சலிட்டுக்கொண்டேயிருப்பார்கள். யாரையும் பேசவிடமாட்டார்கள். சபையில் வீணர்களைப் போல் நடந்து கொள்வார்கள். நாகரீகமாகவே நடந்து கொள்ள மாட்டார்கள்.

தமிழில் : சுமதி
நன்றி : ஃப்ரண்ட்லைன்
மார்ச் 31 - 2001

★ ★ ★

SEELA NORWAY SIGNATURE

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SEELAN BOOK
NORWAY
SIGNATURE

www.tamilarangam.net

எங்கள் நினைவுகளில்

# தோழர் இந்திரஜித் குப்தா



தொகுப்பு: எம்.ஏ. பழனியப்பன்

பாவை பப்ளிகேஷன்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்